REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரு 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 25—1—48 | இதழ் 33

# புதிய கோலம்!



திருவிதாங்கூர் திவானாக வீற்றிருந்து மக்கள் கிளர்ச்சியை, அடக்குமுறையால் ஒழிக்க, போர்க்கோலம் பூண்டு, லெப்டினன்டு—ஜெனரலாகி, படைகளை, மக்கள் மீதுஏவிய சர். சி. பி. ராமசாமிஐயர் மக்களின் புரட்சிக்குரலின் ஒலி, செருக்குமிகுந்தவரின் செவியையும் அறுத்துவிடும் திறத்தது என்பதைக் கண்டறிந்து, பதவியைத் தலைமுழுகிவிட்டு, உதகைவந்து சேர்ந்து, போர்க்கோலத்தைக் கலைத்துவிட்டு, போதகாசிரியவடிவத்தில், பிடி, அடி, சுடு, என்று சொன்ன திருவாயால், பிரபஞ்ச மாயை, விஞ்ஞானமோகம், வேதாந்த இரகசியம் என்பனபற்றிப் பேசுவதற்காக, பழகி, இப்போது, அமெரிக்கா கிளம்பி விட்டார்!



# கல்வித் திட்டம்

[பு. ச. அ.]

நம் நாட்டில் படித்தவர்கள் வெகு சிலரே. பிள்ளைகளைப் படிக்கவைக்க ஆசைப்படுவர். ஆனால் பணமின்றித் தவிப்பர். இதற்காகவே சிறு பிள்ளைகளை வேலையில் ஈடுபடச் செய்கின்றனர். சில இடங்களில் ஆரம்பப் பள்ளிகளே கிடையாது. இதனால் படிக்க வசதி ஏற்படவில்லை. இந்நிலையிலிருக்கும் நம் நாட்டில் இது குறித்த சீர்திருத்தமோ சட்டமோ செய்யவில்லை. ஆனால் மேனாடுகளில் எப்படிச் செய்தார்கள் என்பதைக் கவனியுங்கள்.

இங்கிலாந்தில் அடிமைத்தொழில் ஒழிந்தவுடன், தொழிற்சாலைகள் ஏற்பட்ட உடன், மக்களின் அறிவும் சிந்தனையும் வளர்ந்தன. நூல்கள், செய்தித் தாள்கள், நூல் நிலையங்கள் அறிவை வளர்த்தன. ஆனால் தொழிலாளிகள் ஒரு பயனையும் அடையவில்லை. அவர்களுக்கு வயிறு வளர்ப்பதே ஒரு போராட்டமாக இருந்தது. குருமார்கள் பயன் எதுவுமின்றிய படிப்பைமக்களுக்குக்கற்றுக்கொடுத்தனர். பள்ளிகளோ மிகச் சில இருந்தன. 1833-ல் பள்ளிகளை ஏற்படுத்த துரைத்தனத்தார் பணம் தந்துதவி செய்தனர். 1868-ல் ஏற்பட்ட சட்டப்படி இங்கிலாந்தில் பல பள்ளிகள் ஏற்பட்டன. 1870-ல் ஏற்பட்ட "பார்ஸ்டர்" சட்டப்படி பலபொதுக் கல்விக் கழகங்கள் அரசியலார் உதவியும் ஒரு பொதுக் கல்விச் சங்கத்தின் மேற்பார்வையும் பெற்றன. 12 வயதுக் குட்பட்ட சிறுவர்—சிறுமிகள் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பதை நிறுத்திவிட்டு பள்ளிக்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஏற்பட்டது. 1902-ல் ஏற்பட்ட "பால்போர் கல்விச் சட்ட"ப் படி அரசாங்க உதவிபெற்ற பள்ளிக் கூடங்களை நடத்தும் பொறுப்பு நகர சபை (அ) கிராமப் பஞ்சாயத்துச் சபையிடம் விடப்பட்டன. இதனால் ஸ்தல ஸ்தாபன சபைகள் இரையமின்றி நிலங்களைப் பள்ளிகளுக்குக் கொடுக்க முன்வந்தன. இவ்வாறாக புதியப் பள்ளிகள் பல தோன்றின. 1918-ல் ஏற்பட்ட கல்விச் சட்டப்படி கட்டாயப் படிப்பு மாணாக்கர்களின் வயது 14 வரையில் உயர்த்தப்பட்டது. இவ்வாறாக இங்கிலாந்தில் சீர்திருத்தம செய்தனர். மற்றோர் நாடான பிரான்ஸைக் கவனியுங்கள்.

பிரான்ஸில் ஏற்பட்ட மூன்றாம் குடியரசில் பங்கு கொண்டவர் வணிகர், மருத்துவர், கலைஞர், வழக்கறிஞர் இவர்கள் பெரும்பான்மையோர் ஆவர். இவர்கள் மக்களின் உரிமையை நிலை நிறுத்தினார்கள். 1381-82-ல் ஏற்பட்ட "பேரி"ச் சட்டங்களால் 13-வயதுக்குட்பட்டவர்களுக்குக் கட்டாயக் கல்விவசதி அளிக்கப்பட்டன. லைஸிகள் என்னும் உயர்நிலைப்பள்ளிகள் முன்னேற்றத்திற்கான கல்வித்திட்டத்தை மேற்கொண்டன. கோயில்களை இடித்து கல்விச்சாலைகளாக்கினார்கள்.

இம்மாதிரி செய்ததினால் அந்நாட்டுமக்கள் 90% வீதம் படித்து முன்னேறுகின்றனர். நம் நாட்டில் 10% வீதந்தான் படித்து இருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டாமா? அதற்கு இப்பொழுது இருக்கும் கல்வித்திட்டம் மாறவேண்டாமா? என்று எண்ணும்போது, மாறவேண்டும் என்று பதில் கிடைக்கிறது.

ஒவ்வோர் கிராமத்துக்கும் இரண்டு ஆரம்பப் பள்ளிகளிருக்க வேண்டும். அப்பள்ளிகளில் 15 வயதுக்குட்பட்டவர்கள் சேரவேண்டும். அவ்வாறு சேராவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என்று அறிவிக்க வேண்டும். அப்பள்ளிகளுக்குச் "செகண்டரிகிரேட்" படித்தவர்களை ஆசிரியராக நியமித்தல் வேண்டும். இப்பள்ளிகளை ஸ்தலஸ்தாபனத்துக்குட்படுத்த வேண்டும.

நம் நாட்டிலிருக்கும் கோயில் நிலையங்கள் உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படவேண்டும். ஆரம்பப் பள்ளியில் படித்த மாணவன் இதில் வந்து சேரவேண்டும். தாய்மொழியை முதல் மொழியாகவும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் கற்றுத்தரல் வேண்டும். இப்பள்ளிகளுக்கு B. A., L. T., படித்தவர்களை ஆசிரியராக நியமிக்க வேண்டும். தாலுக்காவுக்கு ஒன்று வீதம் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும்.

உயர்நிலைப்பள்ளி படித்த மாணவனுக்கு அதற்குமேல் படிக்க வசதியில்லாவிடின், தொழில் பாடசாலையில் சேர்க்கப்படவேண்டும். அவனுக்கு இஷ்டப்பட்ட தொழிலைக் கற்றுக்கொண்டு, கிராமத்தில் வசிப்பவனாய் இருந்தால், கிராமத்திற்குச் சென்று அவ்வேலையில் ஈடுபடலாம். இவ்விதமான கல்லூரிகள் ஜில்லாவுக்கு ஒன்று, இரண்டு ஏற்படுத்த வேண்டும். அதற்கு வெளிநாடுகளுக்குச் சென்று கற்றுவந்த நிபுணர்களை ஆசிரியர்களாக் நியமித்தல் வேண்டும்.

அடுத்தபடியாக உள்ளது பல்கலைக் கழகம். மொழி, அறிவியல், தொழில் இவைகளை ஆராய்ச்சி செய்பக் கற்றுத்தரல் வேண்டும். நாம் வேலைக்காகப் படிக்கிறோம் என்ற குறுகிய நோக்கம் ஒழிந்து நாம் நம்மால் இயன்ற வேலைகளை நம் நாட்டிற்குச் செய்வதற்காக நாம் படிக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படும் முறையில் படிக்கவேண்டும். தாய்மொழிப் பற்றும், விஞ்ஞான அறிவும் பெற்றுப் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேற வேண்டும.

இத்திட்டத்தின்படி படித்த மாணவர்கள் வருங்காலத்தில் அறிஞர்களாவதில் ஐயமில்லை. இவர்களே நாட்டிற்கு நல்ல திட்டங்களைத் தீட்டித்தருவார்கள் என்பது திண்ணம்.

*

முதல் இதழ் வெளிவந்து விட்டது!

"வாழ்வு"

(மாதமிருமுறை)

அடுத்த இதழில்!

கண்ணதாசன், மணிவாசகம், கஜேந்திரன், தில்லை வில்லாளன், T. K. சீனுவாசன், மு. அண்ணாமலை ஆகியோரின் எழுத்தோவியங்கள் இடம் பெறுகின்றன. பெரியாரின் ஆந்திரநாட்டுச் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் தோழர் கஜேந்திரனால் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

தனிப்பிரதி 0—2—0 ஆண்டுக் கட்டணம் 3—0—0 மாதிரிப்பிரதிக்கு மூன்றணா தபால் தலைகள் அனுப்பவேண்டும்.

விபரங்களுக்கு: நிர்வாகி,
"வாழ்வு"
புதுக்கோட்டை

*

## நான் காண விரும்பும்

# புதிய சமூகம்

[வரது]

உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இன்று ஒருவரும் பெறுவதில்லை. அனைவரும் அவரவர் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெற்றால், சமூகத்துக்குத் தன் உழைப்பைத் தராத நிலமுள்ளவனோ, பங்குதாரனோ, முதலாளியோ உயிர் வாழ முடியாதே! முதலாளி, மீத்துவைத்தோ, தலைமுறை தலைமுறையாகப் பெற்றோ, வேறு நல்வழி தீயவழி எதனாலேயோ பெற்ற முதலைக் கொண்டல்லவா உயிர் வாழ்கிறான்? அம்முதலைக் கொண்டு சமூகத்திற்குத் தேவையான கூலங்களையோ துணிகளையோ, புத்தகங்களையோ தரக்கூடிய சாதனங்களைப் பெறுகிறான்; அவற்றில் பிறரை உழைக்கச் செய்கிறான். அவ்வுழைப்பால் வரக்கூடிய இலாபத்தைக் கொண்டு வாழ்கிறான்; உழைப்பவரை விடச் சிறப்பாக வாழ்கிறான். அவனுக்கு உழைப்புத் தேவை இல்லை. பல முதலாளிகள் உழைப்பாளிக்கு மிகத் தொலைவில் வாழ்கின்றனர்; பல முதலாளிகள் தம் முதல் போடப்பட்டிருக்கும் நிலங்களையோ ஆலைகளையோ பார்த்துக்கூட இரார். இன்று பெரும்பான்மையோர் தம் உழைப்பால் வாழும் தொழிலாளர்; சிறுபான்மையோர் பிறர் உழைப்பால் வாழும் முதலாளிகள். இச்சிறுபான்மையோர் உள்ளவரையில் இப்பெரும்பான்மையோர் தம் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவதற்கில்லை.

இச்சிறுபான்மையோரான முதலாளிகள், எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. பெரும்பான்மையோர், தொழிலாளிகள், எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. எந்த ஊரிலும், சிற்றூரிலும் கூட, இதைப் பார்க்கலாம். சொந்த வீடு, கால்நடைகள், நிலம் வைத்து வாழ்பவர் எண்ணிக்கை சென்ற ஒரு தலைமுறையில் எவ்வளவு குறைந்துவிட்டது? சொந்தக் கருவிகளைக் கொண்டு வேலை செய்யும் தச்சர், கொல்லர், ஓட்டர், எண்ணிக்கை குறைந்து, பிறரிடம் கூலி வாங்கி உழைக்கும் இதே தொழிலாளர் எண்ணிக்கை எவ்வளவு பெருகிவிட்டது! சிறு ஆலைகள் பெரும் ஆலைகளுக்குள் அடங்கிவிட்டன; சிறு நிலமுள்ளோர் பெரு நிலமுள்ளோருக்குத் தம் நிலத்தை விற்றுவிட்டு அவரிடம் தொழில் புரிந்து பிழைக்கின்றனர்; சிறு தொழில் பெரும் தொழில்களுடன் கலந்துவிட்டன.

ஆகவே, சிறுபான்மையோர் பல துறைகளிலும் மிக்க வலிமை பெற்றுவிட்டனர். பெரும்பான்மையோர் தம் எண்ணிக்கை தவிர மற்ற யாவற்றிலும் வலிவு குறைந்துவிட்டனர். செல்வம் சிறுபான்மையோரிடம் குவிந்துவிட்டது; வறுமை பெரும்பான்மையோரிடம் குவிந்துவிட்டது. சமூகத்தில் பொதுவாக நோக்கும்போது தரம் குறைந்துவிட்டது.

இப்படி, சிறுபான்மையோர் கைவசப்பட்ட சாதனங்கள் எப்படி உபயோகிக்கப்படுகின்றன? பஞ்சாலைகள், நிலங்கள், சுரங்கங்கள், பஸ்கள் அவற்றை உரிமையாக்கிக்கொண்ட முதலாளிகளுக்கு இலாபத்தைத் தரும் சாதனங்களாக உள்ளனவே அன்றி, சமூக நலத்தைக் கருதி உபயோகிக்கப்படவில்லை. மக்கள் உணவின்றி இறந்தாலும், உடையின்றி நடுங்கினாலும், நிலக்கரி இன்றிப் பிற தொழில்கள் மூடப்பட்டாலும், பஸ்களிலும் ரயில்களிலும் தொத்திக்கொண்டு அபாயகரமான முறையில் சென்றாலும் முதலாளிக்குத் தன் இலாபத்திலேயே கண்; சமூகத்தைப் பற்றி அவனுக்குக் கவலை இல்லை. விலை குறைந்தால் நிலம் தரிசாகக் கிடக்கும்; ஆலைகள் துருப்பிடிக்கும்; விலை அதிகமானால் உற்பத்தி அதிகரிக்கும். ஆகவே, சமூகத்தில் இன்று உற்பத்தி நிகழுவது இலாப நோக்கம் கொண்டே அன்றி உபயோக நோக்கம் கொண்டல்ல. இலாபம் என்பது அடிப்படையான கருத்து எனச் சிறு குழந்தையும் அறியும் வண்ணம் இன்று அறிவைப் பரப்பிவிட்டார்கள். சமூகத்தின் தேவைகளை நிறை செய்வது உற்பத்தி சாதனங்களின் கருத்து என்ற கொள்கையே புதிதாகக் காணப்படுகிறது.

இலாபநோக்கம் சமூகத்தை எங்கு கொண்டு செல்லுகிறது? இலாபத்திற்காக உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. பண்டங்கள் பதுக்கப்படுகின்றன. பண்டங்கள் நிறைந்திருந்தும் வாங்குவோர் இல்லாமலோ, அன்றி விலை அதிகமென்றோ, அன்றி கொள்ளைலாபவேட்டையாலோ பஞ்சம் உண்டாகிறது. பிற நாடுகளில் கொள்ளையடிக்கும் நோக்கத்தால், வல்லரசுகளுக்குள் போர் மூளுகிறது. உள்நாட்டு வணிகத்தை தாம் கைக்கொண்டதோடு அமையாது, பிறநாட்டு வணிகத்தையும், அந்நாட்டோர் உழைப்பையும் மூலப்பொருட்களையும் சுரண்டுவதில் முதலாளிகள் தலையிடுகின்றனர். உலக மக்களுக்குள் தம்முள் இருந்த நம்பிக்கை, நாணயம், நட்புப் போன்ற நற்குணங்கள் சிதறி வஞ்சகம், கபடம், திருட்டு, பொய்போன்ற குணங்கள் தோன்றின. கலையும் இலக்கியமும் சிறுபான்மையோரைப் புகழ்ந்தே தோன்றின. ஏனெனில், அவர் ஆதரவு பெற்றே வளர வேண்டியன. கலைஞரும் எழுத்தாளரும் தம் தொழிலை இலாபத்திற்காக நடத்தவேண்டியவர் ஆகி இன்பம் தரக்கூடிய இனத்தவரையே நாடினர், அவர் புகழையே பாடினர்; அவர் வாழ்க்கையை ஏட்டிலே எழுதினர். பிறவகைக்கலைகள் அருகின.

உயரிய கலைகள் எனப்படும் ஓவியம், சிற்பம், இசை, நாடகம் ஆகியவும் இலாபத்திற்காக இயங்கின. சமூக முன்னேற்றத்திற்காகவோ, பொதுமக்கள் இன்பத்திற்காகவோ இயங்கவில்லை. உயர்கலை சிலருடைய பொழுது போக்கிற்காகவும் பலருடைய அடிமைத்தனத்திற்காகவும் பயன்பட்டது.

மதங்கள் வளர்ந்தன. பழவினையில் நம்பிக்கை ஊட்டப்பட்டது. எளியோரே மரணத்திற்குப்பின் சிறப்பெய்துவர் என்று போதிக்கப்பட்டது. பொருள் எய்துதல் இப்பிறவியில் அன்றிப், பழம் பிறவிகளில் செய்த நல்வினைப்பயனால் எனவும், வறுமையுறுதல் தீவினைப்பயனால் என்றும் சாத்திரங்கள் உண்டாயின. இவற்றிற்கு உறுதுணையாகச் சோதி

டம்போன்ற துணைநூல்கள் தோன்றின. சாதிகளில் உயர்வு தாழ்வு கற்பித்தனர். பொதுவாகஉழைப்போர் கீழாகவும் சுரண்டுவோர் மேலாகவும் நூல்கள் கூறின. சமூகத்திலும் உழைப்பால் வாழ்வோர் மிக்க ஊதியம் பெற்றாலும் உற்பத்தி சாதனங்களை உடையோரிலும் கீழாக மதிக்கப்பட்டனர். உழைப்பு கீழ், உடைமைமேல் என்றகருத்துத் தோன்றியது.

ஆகவே, சமூகம், பாட்டாளி, முதலாளி என்ற இரு வர்க்கங்களாகப் பிரிந்தது. ஒருவர்க்கம்உடைமையைக் கொண்டுவாழ்வது; மற்றொரு வர்க்கம்உழைப்பால்வாழ்வது. சாதியும் மதமும் நாடும் பொதுவாக இருந்தாலும் வெவ்வேறாக இருந்தாலும் சமூக அமைப்பில் வர்க்கங்கள் வெவ்வேறே. சிறப்பாக, முதலாளிகள் தம் நாட்டையும் மதத்தையும் சாதியையும் கடந்து உறவுபூண்டனர். இலாபநோக்கம் ஒன்றே குறிக்கோள் ஆதலின், மற்றத் தொடர்புகள் இந்நோக்கத்திற்குத் தடை செய்ததால்முதலாளிகள் அவற்றைத் தகர்த்து எறிந்தனர். தொழிலாளர் ஒன்றுபட்டுத்தம்மை எதிர்க்காமல் இருப்பதற்காக அவர்களுக்கு இடையில் சாதியையும் மதத்தையும் நாட்டையும் அடிஒட்டிய வேறுபாடுகளை முதலாளிகள் வளர்த்தனர். அவற்றைமீறி ஒன்றுபட விரும்பிய தொழிலாளர், 'துரோகிகள்' 'நாஸ்திகர்' 'பாஷாண்டிகள்' எனக்கூறவும் முதலாளிகள் தயங்கவில்லை. அறிவு வளர்ச்சிக்கான பத்திரிகைகளையும் புத்தகங்களையும் பள்ளிக்கூடங்களையும் பிரசாரசாதனங்களையும் முதலாளிகள் தம் உரிமையாக்கிக்கொண்டனர். சில தலைமுறைகளில் தம் வாழ்க்கைக்கும் குறிக்கோள்களுக்கும் மாறுபட்ட பத்திரிகைகளையும், புத்தகங்களையும், படிப்பையும் பெரும்பாலும் மாற்றி அமைத்துவிட்டனர். இன்றேல், பெரும்பான்மையோரானதொழிலாளி வர்க்கம் தம் நிலையை உணர்ந்து சிறுபான்மையோரான முதலாளி வர்க்கத்தை இதற்குள் தகர்த்துச் சிதற அடித்திருக்கும்.

வர்க்கப்போராட்டம் வளர்ந்தது. அதாவது, முதலாளி குறைந்த ஊதியம் கொடுத்து நிறைந்தஉழைப்பைப் பெற முயல்வதும், தொழிலாளி குறைந்த உழைப்பைக்கொடுத்து நிறைந்தகூலிபெற முயல்வதும் இயற்கையாகி விட்டது. இதை ஒட்டிய பொருளாதார தத்துவங்களும் நிகழ்ச்சிகளும் வேலைநிறுத்தம், தொழிற்சங்கம், முதலாளிகள் சங்கம், சட்டம், போலீஸ் போன்றவற்றை நாம் கண்டோம். தொழிலாளியும் முதலாளியின் முதல் இன்றித் தன் தொழிலுக்கு இடமில்லைஎன்பதையும், தொழிலாளியின் உழைப்பை விட்டால் தன் முதல் பயன் தராது என்பதையும் உணர்ந்தான். சமூகத்திற்குத்தொழிலும் அவசியம்; முதலும் அவசியம்; ஒன்றுக்கொன்று இன்றியமையாதன. அவை முரண்படவேண்டியதில்லை; ஒன்றுபடவேண்டும். எந்த அடிப்படையான கொள்கையில் ஒன்றுபடவேண்டுமோ அந்தக்கொள்கையே சோஷலிஸம்: "உழைப்புக்குத் தகுந்த ஊதியம்."

இக்கொள்கை பரவ இயலாதவாறு முதலாளிகள் கைக்கொண்ட முக்கியமான சாதனம் அரசியல். நாட்டு அரசியல் முதலாளி வர்க்கம் முன்னேறுவதற்காக அமைந்தது. முதலில், சொத்து உரிமையைப்பாதுகாப்பது; அவ்வுரிமை பெற்றவர்க்கே அரசியல் நடத்தும் பெருமையை அளிப்பது; அப்பாதுகாப்புக்காகச் சட்டங்கள் இயற்றுவது; அவ்வுரிமையை எதிர்ப்போரை அடக்குவது. இரண்டாவதாக, அனைவரும் சொத்துரிமை பெறலாம் எனவும் பிறருடைய உழைப்பின்பயனைப் பெற்று உழைக்காமல்வாழலாம் எனவுமானமனப்பான்மையைவளர்ப்பது சுரண்டலே. அடிப்படையான அரசியல் நிலைபெற, சுரண்டலே தூயது, சிறந்தது என்ற அரசியல் தந்திரத்தை மக்கள் உணரவேண்டும்! மூன்றாவதாக, முதலாளி வர்க்கம் தன் நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கத்தை அடக்கவும், பிற நாடுகளிலுள்ள முதலாளிகளையும் தொழிலாளரையும்— சமூகம் முழுவதையுமே— ஒடுக்கவும் போர் புரிய அரசியல் ஒரு கருவி. வெளிநாட்டுப் போர்களால் உள் நாட்டுத்தொழிலாளருக்குப் பயன்எதுவும் இல்லை. தம் முதலாளிகளுக்காகத்தாம் இரத்தம் சிந்துகின்றனர். இவ்வுணர்ச்சிஉண்டானால் போரைச்செவ்வனேநடத்த முடியாதென, அரசாங்கம் கூடியவரை எழுத்தறிவற்ற பிற்போக்கான தொழிலாளரைப் படையில்சேர்த்து அவர்களுக்கு இவ்அறிவு வெளியிலிருந்தும் வராதவாறு பெரிய மதில்களால் தடுத்துவிடுகிறது. ஆகவே இத்தகைய அரசியல்சொத்துரிமை, முதலாளி வர்க்க மேம்பாட்டுக் கொள்கை, படைவலி இவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இத்தகைய சமூகத்தில் நாம் வாழ்கிறோம்— உழைப்பும் உடைமையும் வேறுபட்ட சமூகம்; உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறாத சமூகம்; சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அடக்கிஆளுகின்ற சமூகம்;

சிறுபான்மையோரிடம் செல்வமும் பெரும்பான்மையோரிடம் வறுமையும் குவிகின்ற சமூகம்;

சமூக நலனைக் கருதாது இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு தனி உரிமைகள் இயங்குகின்ற சமூகம்;

நயவஞ்சகமும் பொய்யும் களவுமாகிய இழிகுணங்கள் இயங்குகின்ற சமூகம்;

கலையும் மொழியும் இலக்கியமும் சிறுபான்மையோருக்காகப் பயன்படும் சமூகம்;

மதங்களும் சாதிகளும் மூடநம்பிக்கைகளும் மக்கள் அறிவிற்குத் திரையிடும் சமூகம்;

உழைப்புக்கு மதிப்பு இன்றி, உடைமைக்கே மதிப்புத்தரும்சமூகம்;

முரண்பட்ட கோட்பாடுள்ள இரு வர்க்கங்கள் தம்முள்பிணங்கி, பிணக்கறுக்க வழி காணாத சமூகம்;

அறிவு வளர்ச்சி சிறுபான்மையோர் உரிமையாகிய சமூகம்;

முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க உணர்ச்சி தோன்றிப் போரிடும் சமூகம்;

சொத்துரிமை, சிறுபான்மையோர் உயர்ந்தோர் என்றகொள்கை, படைவலி இவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூகம்.

இச்சமூகத்தை நான் வெறுக்கிறேன். மனதார சொல்லார உடலார வெறுக்கிறேன்.

நான் தன்னம்பிக்கை உள்ளவன். மக்கள் தொகுதியில் நம்பிக்கையுள்ளவன். மக்கள் முன்னேற்றத்தில் நம்பிக்கை உள்ளவன். மக்கள்வாழ்க்கை நிலை உயரவேண்டுமென விரும்புபவன். இயந்திரசாதனங்கள் வளர்ந்து மக்களுக்குப் பயன்படவேண்டுமெனக் கருதுபவன். மக்கள் அனைவரும் நோயற்ற வாழ்வு பெறவேண்டும்; உலகின் அழகைப்பருக வேண்

(13-ம் பக்கம் பார்க்க)

# பலாபலன்!

"சூரியனுடைய பார்வை, மட்டாகப் பதினைந்து நாள் பிடிக்கும். அப்போதுதான், இந்தக் காய்ச்சல் குறையும்."

"நெருப்பு வீசுதுங்க; அவர் பக்கத்திலே உட்கார்ந்தாலே"

"வீசும், வீசும்; தீட்சணியமாகத்தான் இருக்கும்; சூரியனுடைய பார்வை அப்படிப்பட்டது, அதற்கென்ன செய்வது. ஆனாலும் பாதகமில்லையே; உயிருக்குப் பயமில்லை—சனி இப்போது இருக்கிற இடத்திலே இராமல், வேறு இடம், அஷ்டமத்துக்குப் போயிருந்தா........... அடடா..........."

'என்னங்க, பெருமூச்சு விடறிங்க?"

"கமலம்மா! உன் புருஷனுடைய ஜாதகத்தை முதலிலே பார்த்ததும், சத்யமாச் சொல்றேன், நான் பயந்துதான் போனேன்—ஏன்—சூரியனுடைய பார்வை அப்படி இருந்தது. பிறகு, சனி, எங்கே இருக்கிறான்—அதுதானே முக்கியம்—அதனாலே, சனியைக் கவனிச்சேன்—அவன், நல்லவேளை—உன் மாங்கல்ய பலத்தாலே—அஷ்டமத்திலே இல்லே—அப்பா—பரவாயில்லே—உயிருக்கு ஆபத்து இராது என்று மனசு நிம்மதியாச்சு."

"என்னமோ போங்க, அந்தவெங்கடேசப்பெருமாள் வாயிலே இருந்து வந்த சொல்மாதிரி, இருக்குதுங்க உங்க பேச்சு."

"நானா பேசுகிறேன். பைத்யமே! கிரஹம் பேசுவதை நான் சொல்கிறேன். ஒவ்வொரு கிரஹமும், சஞ்சாரம் செய்கிறபோது ஏற்படுகிற, பலாபலன்களைக் கண்டறிவதுதானே, முக்கியம். இந்தக்காலத்திலே, கிரஹ சஞ்சாரத்தைப் பற்றின ஞானமே இல்லாதவாளெல்லாம், 'பலகரை'யைவைத்துப் பார்ப்பது, குருவியைக் கேட்பது, என்று ஏதேதோ பொய்யும் புரட்டும் செய்து, பணத்தைத் தேடுவதிலே ஈடுபடுவா. நான் அப்படியோ! சனி, எந்த இடத்திலே இருக்கிறான், அங்காரகன் என்ன செய்கிறான், புதன் என்ன சொல்றான், வியாழன் என்ன பண்ணுவான், [illegible] இப்படி, அந்தந்த கிரஹத்துடைய நிலையைப் பார்த்து, கணித்து, சரி, மூணும் மூணும் ஆறு, ஆறுடன் நாலு சேர்ந்தா பத்து—என்பது போல, திட்டமாகச் சொல்லுவேன். அது போலத்தான், உன் புருஷன் ஜாதகத்தை நன்றாகப் பார்த்துச் சொல்கிறேன், சூரியனுடைய பார்வை தீட்சணியத்தாலே காய்ச்சல் அதிகமாக இருந்தாலும், சனிஇப்போது இருக்கிற இடம், அவ்வளவு கெட்ட இடமல்ல; ஆகையாலே, உயிருக்கு ஆபத்து நிச்சயமாக இராது; படிப்படியாக ஜுரம் குறையும், பயப்பட வேண்டாம்; எதற்கும் சூரியனுக்கும் சனி பகவானுக்கும், ஒரு மண்டலம் விளக்கு ஏற்று, நல்லது. எல்லாம் கணக்குத்தானே. காரணமில்லாதவிவகாரமா! மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்ந்தா, இரத்த நிறமாகிறது போலத்தான், கிரஹங்கள் ஒன்றோடொன்று கொள்கிற சம்பந்தா சம்பந்தத்தாலேயே பலாபலன் உண்டாகும்."

* * *

சம்பந்தா சம்பந்தம்—பலா பலன்—பார்வை தீட்சணியம்—கிரஹ சஞ்சாரம்—இவைகளை எல்லாம விளக்கிவிட்டு, கமலம்மாள் கொடுத்த 'சில்லறை'யைக்கணக்குப் பார்த்து, முடிந்து கொண்டு, ஜோதிடர் குப்பய்யர், வீடு போனார். கமலம்மாள் ஐயர் சொன்ன கணக்கு, பொய்யாகாது, அவர்தான், பலகையிலே இப்படியும் அப்படியுமாக ஏதேதோ கோடுபோட்டு, கட்டங்கள் அமைத்து, ஒவ்வொரு கட்டத்துக்குள்ளேயும் ஒவ்வொரு கிரஹத்தை அடைத்துக் கணக்குப் பார்த்துச் சொன்னாரே, என்று எண்ணாமலிருக்க முடியுமா! மேலும் அவளுக்கு அஷ்டமத்தில் சனி, அங்காரக நிலை, சூரியனுடைய பார்வை என்பன போன்றவைகள், விளங்கவில்லை என்றாலும், மூணும் மூணும் ஆறுபோல, மஞ்சளும் சுண்ணும்புப் சேர்ந்தால் இரத்தநிறம் என்பது போல, என்றுபுரியக்கூடியதைச் சொன்னாரே, ஐயர், அதனால் அவருடைய வாக்கு; பொய்யாகாது என்ற திடமான நம்பிக்கை ஏற்பட்டது. ஏனோ எப்படியோ அவளுக்குத் தெரியாது—குருவி எடுத்துக் கொடுத்த ஏடு, ஐயர் சொன்னதற்கு நேர்மாறாக இருந்தது—அதுபற்றி அவளுக்குச் சற்றுக் கவலைதான்—பயமுங் கூட. குருவி எடுத்துக் கொடுத்த காகிதத்தில்,

சனியவன் கோபத்தாலே
மேலிடம் சென்றதாலே
சனி ஜுரம் ஏறும், மாறும்
சூரியன் ஆணையாலே.

என்று இருந்தது.

குருவி சனிமீதுகுற்றம் சாட்டிற்று; குப்பய்யர் சூரியன்மீது பழியைப் போட்டார். ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, கமலம்மாள், தன் கணவனின் 'கால்மாட்டில்' உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

* * *

சின்னப்பனுக்கு, 'முறைஜுரம்'—ஒரு சமயம், 'இப்பவோபின்னையோ' என்று எண்ணக்கூடியபடி இருந்தது. வேறுசில சமயத்திலே, 'பரவாயில்லை, முகத்திலே தெளிவுவந்துவிட்டது—வாய்க்கசப்பும் சற்றுக் குறைவுதான்' என்று கூறக்கூடிய விதத்திலே இருந்தது, என்றாலும், சின்னப்பனுக்கு என்னமோ, நண்பர்கள் சொன்ன நல்வாக்கு, குப்பய்யர் சொன்ன கிரஹக்கணக்கு எதுவும் திருப்தியோ நம்பிக்கையோ தரவில்லை. ஜோதிடத்திலே, அவனுக்கு நம்பிக்கை இல்லை, சு. ம., என்பதல்ல பொருள். நோன்புபூஜைகளைத் துளியும் தவறாதபடி செய்பவன்தான். ஆனால், குப்பய்யர் போட்டுக் காட்டிய கணக்குச் சரியல்லஎன்பது அவன் எண்ணம். அந்தக்கணக்கு மட்டுந்தானா! இதோ, மற்றொன்று!!

* * *

| | |
|---|---|
| மாலையிலே ஆறுமணிக்கு | 101 |
| இரவு எட்டுக்கு | 103 |
| இரவு பத்துமணிக்கு | 102 |
| காலையிலே எட்டுமணிக்கு | 101 |
| காலையிலே பனிரண்டுக்கு | 104 |
| பிற்பகல் மூன்றுமணிக்கு | 103 |
| பிற்பகல் நாலுமணிக்கு | 102 |

டாக்டர் சுதர்சன், இப்படி ஒவ்வொருதினமும் கணக்கெடுக்கச் செய்து, பார்த்துவந்தார்; ஜுரம் எந்தெந்த நேரத்தில், எவ்வளவு எவ்வளவு 'டிகிரி' அதிகமாகிறது, எப்போது குறைகிறது என்று பார்க்க. இந்தக் கணக்கை ஆதாரமாகக் கொண்டு, டாக்டர் சுதர்சன், ஜுரம் காலையிலே தொடங்கி, பகலெல்லாம் வளர்ந்து, மாலையிலே குறைவது போல் காட்டி, இரவு ஜுரம் ஏறி, பிறகு படிப்படியாகக் குறைகிறது என்று கூறினார். இந்த விவரத்தை, ஏதோ ஒரு பெயருக்குள் அடக்கி, வைத்யசாஸ்திரமுறைப்படிகூறினார். அவருடைய கணக்கு முறையும் தவறல்ல—ஆனால் சின்னப்பனுக்கு, அவர் கூறிய கணக்கும் சரியல்ல என்று தோன்றிற்று. டாக்டர் சுதர்சனுக்கு ஊரிலே மிக நல்ல பெயர்!!

சின்னப்பன், ஜோதிடக் கணக்கு, வைத்தியக் கணக்கு இரண்டையும், தன்னுடைய நோய்க்கு விளக்கம் தரக் கூடியன அல்ல என்று தீர்மானமாகக் கருதி, அடிக்கடி, மெலிவிய குரலில் 'இதனால் எல்லாம் என்ன ஆகும்! சூரியனும் சனியனும் ஒரே கூண்டிலே வந்தால் என்ன, ஒன்றை ஒன்று விழுங்கினால் என்ன! காலையிலே ஜுரம் ஏறி மாலையிலே குறைந்தால் என்ன! என் வியாதிக்கும், இந்தக் கணக்குகளுக்கும் என்ன சம்பந்தம்? இதனாலெல்லாம் ஒன்றும் இல்லை' என்று கூறுவான்.

* * *

"நிலத்தின் விலை குறைகிறதாமே? உண்மைதானா"-சேட் ராம்லால் தன் கடை மானேஜரைக் கேட்டார்.

மானேஜர் மதுசூதனர், "ஆமாம்" என்று சுருக்கமாகப் பதிலளித்தார்.

"சின்னப்பன், சேரவேண்டிய தொகை எவ்வளவு?" — சேட் கேட்கிறார்.

சேட்டிடம், மானேஜர், சின்னப்பன் சேரவேண்டிய பாக்கித்தொகையைக் குறித்துத் தருகிறார்.

சேட், அந்தக் கணக்கை வாங்கிப் பார்த்துவிட்டு,

"ஏகர், அயன், என்ன விலைதான் விற்கிறது இப்போது?" என்று கேட்க, மானேஜர், "இரண்டாயிரத்துக்கும் குறைவுதான்" என்று பதிலளிக்கிறார். "இரண்டாயிரம் என்று வைத்துக் கொண்டாலும், அவனுக்கு இருப்பது நாலரை ஏக்கர்! சேட் ஆயாசத்தோடு பேசுகிறார். "ஆமாம், பத்தாயிரத்துக்கும் போகாது" என்றுபயம் காட்டுகிறார் மானேஜர். சேட், மறுபடியும், ஒரு முறை, மானேஜர் தந்த கணக்குக் குறிப்பைப் பார்க்கிறார் — துண்டுக் கடிதத்திலே, இருக்கிறது சூரியனுடைய பார்வை, சனியின் இடமாற்யம், தெர்மாமீடர் சகலமும், ஆனால் விவரமாக அல்ல, சுருக்கமாக 16000!! சேட், மானேஜரைப் பார்க்கிறார்—மானேஜர் சேட்டைப்பார்க்கிறார்! இந்தக் கணக்கை, ஜோதிடரோ, வைத்தியரோபார்க்கவில்லை-சின்னப்பன் கண்முன் சதா இந்தக் கணக்குத்தான் தெரிகிறது. ஐயர், சூரியனிடம் வம்புக்குப் போகிறார். காய் கதிரோன் என்ன செய்வான். கடன்பட்ட நெஞ்சம் கனலைக் கொண்டுவிட்டது!!

கடன் கணக்கு, கொடுத்த கவலையே, சின்னப்பனின் காய்ச்சலுக்குக் காரணம். இதனை அவன் அறிவான்—ஆனால் காரணம் என்ன என்பதைக் கண்டறியப், பணிபுரிந்த ஜோதிடரும், வைத்தியரும் இதை அறியவில்லை—அவர்கள் சூரியனிடமும் தெர்மாமீடரிடமும், காரணம் காட்டும்படி கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஜோதிடர் சொன்னபடி ஒரு மண்டலம் விளக்கு வைக்க வேண்டுமெனக் கமலம்மாள் கூறினாள், "பைத்யம், கமலு! இதனாலே எல்லாம் ஒண்ணுமில்லே!" என்று கூறினான் சின்னப்பன்—விளக்கு ஏற்ற விடவில்லை.

"இந்த ஜுரத்துக்கு முக்கியமான மருந்து, 'சாத்துக்குடி ஜூஸ்'—அதை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகச் சாப்பிடுகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது"—டாக்டர் கூறினார். "பைத்யம் கமலு உனக்கு! அந்த டாக்டர், அதற்கு மேல் ஒரு பைத்யம்! இதனாலே எல்லாம் ஒன்றுமில்லை. விஷயம் தெரியாமல், நீங்கள் ஆளுக்கொரு தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு கிடக்கிறீர்கள். சூரியன் பார்க்கிறானும், சனியன் மாறுகிறானும்—பைத்யம். இதனாலே எல்லாம் என்ன வரப் போகுது!" என்று சின்னப்பன் கூறினான், பழரசம் சாப்பிட மறுத்தான்.

ஜுரம், திடீரென்று ஒருநாள் குறையலாயிற்று. வேக வேகமாகக் குறைந்து, அடியோடு சாய்ச்சல் நின்றுவிட்டது—வாய்க் கசப்பு ஆச்சரியகரமான முறையிலே மாறிவிட்டது, சின்னப்பன் முகத்திலே நோய்க் குறியே போய்விட்டது.

குப்பய்யர் சூரியனுடைய நீட் சணியப்பார்வைகுறையப்பதினைந்து நாட்கள் பிடிக்குமென்றாரே, அந்தக் காலத்துக்கு முன்னதாகவே!! டாக்டர் கூறிய 'சாத்துக்குடி ஜூஸ்' சாப்பிடாமலிருக்கும்போதே!!

* * *

ஒரு புதிய ஜோதிடர், ஒரு புதிய வைத்தியர், இந்த ஆச்சரியமான மாறுதலுக்குக் காரணம்.

* * *

"சுட்டுப்பட்டி ஜெமீன்தார், நம்ம ஊர் பக்கத்திலே நிலம் பார்க்கிறார்."—நோய் நிலை அறிய வந்த நண்பன் கூறினான் சின்னப்பனிடம்.

"சுட்டுப்பட்டியாரா!" — சற்று ஆயாசத்தோடுதான் கேட்டான் சின்னப்பன்.

"ஏக்கர் ஐந்து, ஆறு, ஆயிரம் என்றாலும், முடித்துக்கொள்ள உத்தேசமாம்."—நண்பன் சொன்னான்.

"நம்ம நாலரையைத் தள்ளிவிட்டு விடுங்களேன்"-நோயாளி கூறினான்.

"ஒரே சதுரந்தானே!"—நண்பன் கேட்டான்.

"ஆமாம்—ஒரே சதுரம்—நல்ல பாய்ச்சல் — ஆத்துக்கால் — இரு போகம்—தங்கம் விளையும்." சின்னப்பன் வர்ணித்தான்.

"இதுக்கென்ன, கசக்குதோ சுட்டிப்பட்டியாருக்கு. நீ சும்மா இரு, நான், முப்பதுக்கு முடித்துவிடுகிறேன்."—என்று நண்பன் வாக்களித்தான்; அதன்படியே செய்தும் முடித்தான். சேட்டின் கடனைத் தீர்த்துவிட்டு, மற்றதைப் பாங்கியில் போட்டான் சின்னப்பன். பாங்கிப் 'ப்யூன்' கொண்டுவந்த ரசீது புத்தகத்திலே, சின்னப்பன், கரன்ட் அக்கவுன்ட் 14000-0-0 என்றுகணக்குக் குறிக்கப்பட்டிருந்தது. புதிய கணக்கு, சாத்துக்குடிசாறு செய்யக் கூடியதைவிட அதிக பலனைச் செய்து காட்டிற்று! சூரியனின் நீட்சணியமும், சனியின் இடபேதமும்,

(அடுத்த பக்கம் பார்க்க)

# விபரீதபுரி

—●—

ஒரு வெறியன் வெடிகுண்டு வீசினான், காந்தியாரைக் கொல்லும் நோக்கத்துடன். அவன் ஓர் இந்து-வாலிபன்—என்று தெரியவருகிறது.

காந்தியாரைக் கண்கண்ட தெய்வமென்று, கைகூப்பித் தொழவும், அவர் காலடி வீழ்ந்து போற்றவும், எந்த அளவுக்குப் பக்திமுற்றி இருக்கிறதோ, அதுபோலவே வெடிகுண்டு வீசும் அளவுக்கு வெறிஉணர்ச்சியும் இருக்கிறது—இரண்டுவகையும், வடக்கே!

மனித சுபாவம், குறைந்து காட்டுப் போக்கு அதிகரித்துவிட்டிருக்கிறது, வடக்கே. அங்குதான் 'மந்தை மனப்பான்மையும்' அதிகம், அது போலவே, மனிதனுக்குள் உள்ள மிருகம் அடிக்கடிக் கிளம்புவதும் அங்குதான்.

திராவிடம், தெளிவுள்ளமக்களைப் பெரிதும் கொண்டநாடு. இங்கும் 'பூஜா உணர்ச்சி' பரவிவிட்டது என்ற போதிலும், அதேஅளவு இல்லாவிட்டாலும், அதனை மட்டுப்படுத்தும் வல்லமை பெறும் அளவேனும், பகுத்தறிவும் இருக்கிறது. எனவேதான், இங்கு, மகரிஷிகளையும் மகாத்மாக்களையும், அந்தநாள் தொட்டு, ஆராய்ச்சிக்குட்படுத்தி, அவர்களின் கொள்கைகளை அலசிக் காட்டி, அவர்களால், மக்கள்பெறும் பயன் என்னவாக இருக்க முடியும் என்ற சிந்தனைக்கு இடம் தரப்பட்டிருக்கிறது.

வடநாட்டவரோ, அதுபோல் அல்ல. கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவது—பிடிக்கவில்லை என்றால், கழுத்தை நெரித்துக் கொல்வது, என்ற முறையிலேயே ஆதிநாள் தொட்டு இருந்து வந்திருக்கிறார்கள்.

ஏன், இதனைக் குறிப்பிட்டோம் என்றால், இங்குள்ள காங்கிரஸ் இளைஞர்கள், நாம், காந்தியத்தின் முறைகளையும், கொள்கைகளையும், திட்டங்களையும், அவ்வப்போது, ஆராய்ச்சிசெய்து, அவை, நாட்டின் முற்போக்குக்கு ஏற்றவையல்ல, என்று எடுத்துக்காட்டி வருவதை, ஏதோ ஒருபெரிய 'பாபச்செயல்' என்றும், 'ஒரு மகாத்மாவை' இப்படிப் பழிக்கலாமா, என்றும், கோபித்து, நமது போக்கை, துரோகம், என்று கூறிக்கொதிப்பதுண்டு. காந்தியத்தின் போக்கை நாம் ஏற்கமறுப்பது, அந்தத்திட்டம், நமதுநாட்டுக்கு ஆகாது என்பதை நாம் மனமார நம்புவதால்தானேயொழிய, வெடிகுண்டுவீசிய வெறியன் போல, காட்டு உணர்ச்சியால் அல்ல. கொள்கைகளை நாம் கண்டித்திருக்கிறோமேயொழிய, ஒருபோதும் தனிப்பட்டவர்கள்மீது, குரோதம் காட்டியது மில்லை. இது இங்குள்ளநிலை. வெளிப்படையாகப் பல ஆண்டுகளாக, காந்தியத்தைக் கண்டிப்பவர்களின், நிலை. ஆனால் அங்கே, வடநாட்டிலே, மலர்கொண்டு அர்ச்சிக்கும் பக்தர்களுக்கிடையே, குண்டுவீசிக் கொல்லநினைக்குங்கொடியவனும் இருக்கிறான். பக்தர்கள் சூழநிற்கிறார்கள், பாவிகளும் உள்ளனர், இந்த 'இருமுனைகள்' ஏற்படக்காரணம், என்ன? பூஜா உணர்ச்சியும் காட்டுமுறையும். இரண்டும் தவறு. உள்ளத்தை உரைகல்ஆக்கி, யாருடைய திட்டமாயினும், அலசிப்பார்க்கும்போக்குத்தான், சிறந்தது. அதுவடநாட்டிலே குறைவு. மனஎழுச்சிக்கு அங்கு இடம் அதிகம், மனத்தெளிவு குறைவு! காந்தியார்மீது கயவன் வீசியகுண்டு, வடநாட்டின் மனப்போக்குக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அந்தக்குண்டு, ஆபத்தை விளைவிக்கவில்லை—அகமகிழ்ச்சி அடைவருக்கும்.

●

(மூன்பக்கத் தொடர்ச்சி)

இதற்குச் சாந்தி செய்ய, விளக்கு வைப்பதுமான, சகல காரியமும், அந்த ஒரே ஒரு வரி மூலம் பூர்த்தியாகிவிட்டது.

"குப்பய்யர் அப்போதே பார்த்துச் சொன்னாராம்!" என்று ஊரார் பேசிக்கொள்கிறார்கள்.

"டாக்டர் சுதர்சன், மணிக்கு மணி, ஜுரத்தின் வேக அளவைக் கணக்கெடுத்து, கண்ணுங் கருத்துமாக இருந்து, மருந்து கொடுத்தார்—சொஸ்தமாகி விட்டது—சின்னப்பன் பழயபடி கொழுக்கட்டை போலாகிவிட்டான்" என்றும் ஊர் பேசுகிறது.

"சூரியனுடைய பார்வை எவ்வளவு கெடுதல் செய்தாலும், சனி மட்டும், அஷ்டமத்துக்குப் போகாமலிருந்தால், ஆபத்து வரவே வராது. நம்ம சின்னப்பன் விஷயம் தெரியுமல்லவா!"—குப்பய்யர், பெருமையாகத்தான் பேசிக்கொள்கிறார். சின்னப்பன், இவர்களை மறுத்துப் பேசுவதில்லை—ஆனால் அடிக்கடி மனைவியிடம் மட்டும் "இதனாலே எல்லாம் ஒண்ணுமில்லே கமலம்!" என்று கூறுகிறான். அவன் அறிவான், சூரியன் பார்வையால் பலா பலன் ஏதும் ஏற்படவில்லை — சேட்டின் பார்வை ஜுரத்தை ஏறச் செய்தது—சுட்டுப்பட்டியார் பார்வை, ஜுரத்தைக் குறைத்துவிட்டது என்ற உண்மையை.

✻

## குறிப்பில் இருக்க வேண்டியவை

—⊛—

கோவை, மாகாணக் காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்த காமராஜர், பெரியாரின்பெருந்தொண்டினை (காங்கிரசில்)ப் பாராட்டிப் பேசினார்.

* * *

கோவையில், ம. பொ. சி. கொண்டு போன சுதந்திர சோஷலிஸ தமிழரசுத் தீர்மானம், தலைவரால் நிராகரிக்கப்பட்டது. அவ்வாறு நேரிட்டால், கோவை காஞ்சியாக மாறும் என்று ம. பொ. சி. 'முரசில்' எழுதினார். கோவை, கோவையாகவே இருக்கிறது.

* * *

சர்தார்படேல், சோஷியலிஸ்டுகளின் சீட்டுகளையும் கிழித்துவிடப் போவதாகக் கூறிவிட்டார். கதவு திறந்து இருக்கிறது போகலாம் வெளியே என்கிறார், போகாவிட்டால்......என்றும் மிரட்டுகிறார்.

* * *

சென்னையில், பிப்ரவரி முதல் தேதி, நாவலர் பாரதியார் தலைமையில், அகில தமிழர் மாநாடு நடைபெற இருக்கிறதென வரவேற்புக் கமிட்டித் தலைவர் வெங்கடேச ஐயங்கார் அறிவிக்கிறார். மந்திரி பக்தவத்சலம் மாநாட்டைத் திறந்துவைக்கிறார். மாநாட்டில், பெரியார், மா. சிங்காரவேலு ஆகியோரின் படத் திறப்பு விழாக்கள் நடைபெறுமென்றும், திரு. வி. க. இதில் கலந்துகொள்கிறார் என்றும் அறிக்கை வெளிவந்திருக்கிறது.

* * *

கோவை, சேலம், திருச்சி, ஆகிய நகர்களில் ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

✻

# திராவிட நாடு

காஞ்சி] 25—1—48 [ஞாயிறு


# இளமையில் முதுமை!

ஓங்கி வளர்ந்த மருதமரம் குளத்தருகே. மரத்தின் கிளைகள் சில, நீர் நிலையத்தைத் தொட எண்ணுவதுபோல, வளைந்துள்ளன, குளத்தை நோக்கி. சிறுவனொருவன், மரத்தின்மீது ஏறுகிறான். "அஞ்சா நெஞ்சினன் இவன்! அதோ மருத மரத்தின்மீது மேலும் மேலும் உச்சிக்குத் தாவுகிறான் பாரீர்!—என்று, குளத்தருகே, விளையாடும் சிறுமியர் வியந்து கூறுகின்றனர். பெரியவர்களோ, "போக்கிரிப் பயல்! எவ்வளவு உயரம் ஏறிவிட்டான் பார்த்தீரா!!" என்று ஆச்சரியமும் அச்சமும் கலந்த குரலில் பேசிக்கொள்கின்றனர். மருதமரமேறிய சிறுவனோ, கிளைஒன்றின்மீது நிற்கிறான், கழைக் கூத்தாடிபோல. கீழே உள்ள குளத்துநீரை நோக்கிப் பாய்கிறான்—வீழ்கிறான்—'துடும்' என்ற ஓசை கேட்கிறது. முதியோர் மிரளுகின்றனர். ஆனால் அந்தப் பயலோ உள்ளே மூழ்கி, விரைவில் வெளியே கிளம்புகிறான், கையில் மணலையும் எடுத்துக்கொண்டு.

மருதமரத்தின் உச்சி ஏறி, வளைந்திருக்கும் கிளையில் நின்று, கீழே உள்ள குளத்தில் துடுமெனப் பாய்ந்து, வெளிவரும் சிறுவனை, அவனையொத்தவர்கள் பாராட்டாமலிருப்பரோ! சிறுமியரும் இருக்கின்றனரல்லவா, குளத்தருகே. சிலர் ஓடிவந்து அவனைத் தழுவிக்கொள்கின்றனர்—அவனும் அவர்களைத் தழுவிக்கொள்கிறான்! சில சிறுமிகளுடன் கைகோர்த்து விளையாடுகிறான். சிலருடன் ஓடி ஆடி விளையாடுகிறான்! சிலர் ஒளிந்துகொள்ள, அவர்களைக் கண்டுபிடித்து இழுத்து வந்து களிப்பூட்டுகிறான். நீர் நிலையத்தருகே, மகிழ்ச்சிப் பெருக்கு. உலகமறியாத பருவம், வஞ்சனை குடிபுக முடியாத உள்ளம்—அழகான குளம்—ஓங்கி வளர்ந்த மருதம்!—இப்படிப்பட்ட காட்சி அந்தக் குளத்தருகே நின்றதும் மனக்கண்முன் தோன்றுகிறது! ஒரு முதியவருக்கு!

கையிலே தடி! அதை ஊன்றிக்கொண்டு நிற்கையிலேயே நடுக்கமெடுக்கும் நிலையிலே உடல்! பேசினால், குரலில் வலிவில்லை—சொற்கள், சிறு சிறு அளவே வருகின்றன—இடையிடையே இருமல் தொல்லை தருகிறது. இவ்விதமான நிலையில், முதுமையுற்றவர், குளத்தருகே நிற்கிறார்—அவர்தான், இந்தக் காட்சியைக் காண்கிறார்—மருதம் ஏறிக் குளத்தில் குதிக்கும் குறும்புக்காரச் சிறுவனையும், அவனுடன் விளையாடும் சிறுமியரையும். அவன் குளத்திலே குதித்தபோது எழும் 'துடும்' என்ற சத்தம் கூடச் செவியில் ஒலிப்பதுபோலத் தோன்றுகிறது. அவ்வளவு உயரத்திலிருந்து கீழே தாவுகிறானே, என்ன ஆகுமோ என்று, கரையருகே இருந்த பெரியவர்கள் மிரள்வதுகூடத் தெரிவது போலிருக்கிறது, அந்தக் கிழவருக்கு. அங்கே நின்று, அகக் கண்முன் தோன்றிய இந்தக் காட்சியைக் கண்டு, முதலில் களிக்கிறார்—பிறகு சிந்திக்கிறார்.

"கல்லா இளமை! ஆம்! கல்லா இளமைப் பருவத்தை இப்படித்தான் களிப்பாகக் கழித்தோம். இப்போது உடலிலே நடுக்கம்! அன்று, இவ்வளவு உயரமான மருதத்தின்மீது, ஆஹா! எவ்வளவு விரைவாக, அஞ்சாது ஏறிக் குதித்தோம். இப்போது கையிலே தண்டு! அப்போது? நீருக்குள் மூழ்கி, மணலை அல்லவா, கையிலே எடுத்துக்கொண்டு வந்தோம். இப்போது இருமல்! அப்போது சிரிப்பு—பாட்டு! இப்போது கரையருகே, கையில் தடியுடன், உடல் நடுக்க, இருமல் வாட்ட நிற்கிறோம். அன்று மணலில் சிறுமியருடன் ஆடிப்பாடிக் களித்தோம்.

இவ்விதமெல்லாம் சிந்திக்கிறார். மருத மரத்தின் உயரத்தைப் பார்க்கிறார் — மறுபடியும் குளத்தைப் பார்க்கிறார். கிளையைப் பார்க்கிறார், சுற்றுமுள்ள இடத்தைப் பார்க்கிறார். 'துடும்' என்ற ஓசைகூடக் கேட்கிறது! இளமை! இன்புற்று, ஏதுமறியாது, விளையாடிக்கொண்டிருந்த நிலைமை! இளமை, இனி வாராது!! அந்த இளமையின்போது இருந்த களிப்பை எண்ணிக்கொண்டால், மீண்டும் நாம் பெறமுடியாத இளமையாயிற்றே அது என்பதை எண்ணிக்கொண்டால், வருத்தமாகக்கூட இருக்கிறது.

முதியவர் இதுபோல் எண்ணுகிறார்—மருத மரத்தின்மீது ஏறி விளையாடிய சிறுவன்யார்? அவரேதான்! அன்று 'துடும்' எனக்குதித்தவர்தான், இன்று, இடையிடை இருமல் வருத்த, சிறுசொல் பேசும், கிழவராகி, மருத மரத்தின் உச்சிக் கிளையைத் தாவிப் பிடித்த கரத்தால், தடியை ஊன்றிப்பிடித்துக்கொண்டு, கிளை ஆட, அதனுடன் சேர்ந்துதான் ஆடிய நிலைபோய், தடிகொண்டு நின்றும், உடல் நடுக்குறுமுள்ள நிலையில், கரையருகே நிற்கிறார்—தன் இளமையை எண்ணிக் கொள்கிறார்—மனதிலே கவலை குடைகிறது.

புறநானூற்றில், இக்கருத்தினைக் கொண்ட செய்யுள் ஒன்றுண்டு—தொடித்தலை விழுத்தண்டினார் எனும் புலவர் பெருமகனார் இயற்றியது.

நிலைமையும் நினைப்பும், உள்ள விதத்தை விளக்கும் இச்செய்யுளை, பண்டைத் தமிழகப் புலவரின் மனப்பண்பினை அறிவிக்க மட்டுமல்ல, நாம் இங்கு எடுத்துக் காட்டியது. இளமையைப்பற்றி முதுமையின்போது எண்ணி ஏங்குவதுபற்றிக் குறிப்பிடவுமல்ல. நிலைமைக்கேற்றபடி நினைப்பு இருக்கும் என்றபொது உண்மையிலே, உள்ள பல 'கோணங்களை'ப் பற்றிச் சிந்திக்கவும் அதையொட்டி எழும் பல பிரச்னைகளைப்பற்றி யோசிக்கவும், இந்த அருந்தமிழ்ச் செய்யுள் ஒரு தூண்டுகோலாக அமையவேண்டும், என்பதற்கு இச்செய்யுளைக் குறிப்பிட்டோம்.

தண்டு கையிலேகொண்டு நின்ற முதியவர், மருதமரத்தருகேநின்றுங்கூட, வேறு எதையேனும் பற்றிய நினைப்பிலே மூழ்கியிருந்துவிட முடியும். ஆனால் இவர் மனக்கண்முன் கடந்த நாள் காட்சி தோன்றுகிறது. ஆனால் இதேபோல் அன்று அதாவது சிறுவனாக இருந்தபோது, மருத மரத்தின் கிளையிலே ஏறி, கீழே குதிப்பதற்குத் தயாராகி, குளத்தை நோக்கியபோது, சிறுவனின் கண்முன், கையிலே தண்டுடன் நின்று, உடல் நடுக்குற்றுவாடும் கிழப்பருவம், தெரிந்திருக்குமா! இராது!! முதுமையிலே இளமையின் நினைவு தோன்றமுடியும்-இளமையிலே முதுமையுற்றால் இன்னின்னபடி ஆகிவிட

வேண்டி நேரிடும் என்ற நினைப்பு எழாது.

இந்த முதியவருக்கு, இளமையின்போது நடைபெற்ற பல காரியங்கள் காட்சிகளாகத் தோன்றிய போது, இளமை மீண்டும் வராதே என்ற ஏக்கம் பிறந்திருக்கும் என்ற போதிலும், மறுகணம் அந்த ஏக்கம் மாறிவிடும் — ஏனெனில், இளமை போனதும் முதுமை வந்துற்றதும், இயற்கையின் செயல்—இவராக வருவித்துக்கொண்ட இன்னல் அல்ல! இவர்மட்டுமல்ல, எந்த இளையவரும் இனியோர் நாள் முதியவராகத்தானே வேண்டும். எனவே இயற்கை நியதியாகிய, இளமை மாறி முதுமை வந்தெய்தும் முறையை, எண்ணி, அவர் மனச் சாந்தி பெறமுடியும். ஆனால், இளமையில் முதுமை பெற்றால், அவர் நிலை, என்ன ஆகும்!! மருதமரத்தின் கிளைமீது ஏறிநின்ற காலம் ஒன்று இருந்தது, இன்று கரையருகே கையில் தடியுடன் நிற்கும் காலம் வந்தது, என்ற கவலை பிறந்தாலும், மறுகணம் மறையும், ஆனால், மருதமரத்தின் கிளைமீதுநின்று, சிறுமியர் வியந்து கூவ, பெரியவர் மிரள, நீரிலே தடுமென வீழ்ந்து, எழுந்திருக்கும்போது, சிறுவன் கிழவனாகி, கையிலே தடியுடன், நடுக்கும் உடலுடன், இருமிக்கொண்டு, "ஐயகோ! என்னைக்கரையேற்றுக!" என்று குளறும், திடீர் மாற்றம் ஏற்பட்டால், எப்படி இருக்கும்!

சங்க நூற்களை நன்கறிந்தோர் கண்டறிந்து நமக்குக்கூறவேண்டும், இத்தகைய ஓர் திடீர்மாறுதலைக் கற்பித்துக்கொண்டு யாரேனும் புலவர், ஏதேனும் செய்யுள் இயற்றியிருக்கிறாரா இல்லையா என்பதுபற்றி—நாமறியோம். ஆனால், நாம் வெட்டிக்கு இத்தகைய கற்பனையில் ஈடுபடும் நோக்கம் கொண்டல்ல இதனை எழுதுவது. சங்க காலத்திலே இருந்ததோ இல்லையோ நாமறியோம், ஆனால் இப்போது நமதுநாட்களிலே, நாம் காண்கிறோம்-மருதமரமேறிக் கீழே குதித்த வீர இளைஞன், வெடவெடக்கும் உடலமைந்த கிழப் பருவமுற்றுக் குளத்தைவிட்டு வெளி வரும் காட்சியை.

எங்கே? எப்போது? ஏன் கம்பத்தனம் செய்கிறாய் என்று கேட்பீர்கள். இதோ, கற்பனையை அனுப்பி விடுகிறோம், அதனைத் தழுவி நிற்கும் உண்மையை உரைக்கிறோம்—பிறகு கூறுங்கள், மருதமரத்து இளைஞன், தடிகொண்டகிழவனானது போன்றதுதானா, அல்லவா, நாம் குறிப்பிடப்போவது என்பதை.

திடீரென்று பண்டித ஜவஹர், பத்தாண்டு முதுமைநிலை அடைந்து விட்டார்!

அதாவது, பண்டித ஜவஹருக்குத் திடீரென்று,-இயற்கையின் முறைப்படி அல்ல—வேறு காரணம் பற்றி-முதுமை வந்துற்றது!

முதுமையின் குணம் என்ன? நினைப்பு என்ன? என்பதை அறியச் செய்யுள் உதவும்என்று நம்புகிறோம்.

அந்த முதுமை, நாளொருமேனியாக வளர்வதுதான் இயற்கை—தவிர்க்க முடியாதது. ஆனால்பண்டிதருக்கோ, இயற்கைக்கு ஏற்றபடி அல்ல—திடீரென்று, எதிர்பாராத விதமாக—முதுமை வந்துவிட்டது-பத்தாண்டுகள் எவ்வளவு முதுமையைத் தரமுடியுமோ, அவ்வளவு முதுமை திடீரென்று அவருக்கு ஏற்பட்டுவிட்டது!

நண்பர்கள், நாம் ஏதோ நையாண்டி செய்கிறோம் நானிலம் புகழும் பண்டிதரை, என்று எண்ணிவிடப்போகிறார்கள்—ஜவஹர் இப்படித் திடீரென்று முதுமை நிலை பெற்றுவிட்டார், என்பது நாம் இட்டுக்கட்டிய பேச்சல்ல, சென்ற கிழமை, சர்தார்படேல் சொன்னது!

இயற்கை முறைப்படி முதுமை வந்தால், கொஞ்சம் கவலை பிறந்தாலும், பிறகு, சாந்தி ஏற்படும், இது யாருக்கும் ஏற்படக் கூடியதுதானே என்ற எண்ணம் எழுமாதலால். ஆனால் இளமையில் முதுமை, எதிர்பாரா முதுமை, ஏற்படுமென்றால், கவலைமட்டுமல்ல, அச்சமும் பிறக்கும்.

"என்ன உடம்புக்கு? ஆசாமி திடீரென்று துரும்பாக இளைத்து விட்டாய்?"

"டைபாய்ட். ஆள பிழைத்ததே ஆண்டவன் தயவாலே. தெரியாதா உனக்கு"

இப்படி உரையாடல் நடைபெறுவது நாமறிந்திருக்கிறோம்.

"என்னப்பா இது. முகம் என்னமோ போலிருக்கிறது? கிழவன் போலக் காணப்படுகிறாய்"

"ஒன்றுமில்லையே! ஷேவ் செய்து கொள்ளவில்லை—அதுதான்."

இதுவும் நமக்குத் தெரிந்த உரையாடல்.

"இளைஞன்—கிழவன் போல எவ்வளவு தத்ரூபமாக மாறியிருக்கிறான் பார்த்தாயா!" நாடகக் கொட்டகைகளில் கேட்டிருக்கிறோம் இது போன்ற பேச்சை.

படேல் கூறுகிறார் பண்டித ஜவஹர், திடீரென்று பத்தாண்டு முதுமையைப் பெற்றிருக்கிறார் என்று. ஏன்? கவலை! கவலை! இளமையில் முதுமை, கவலை நோயின் விளைவு.

ஏகாதிபத்யத்தின் தாக்குதல், பல முறை சிறை, துணைவியின் துயர் தரும் பிரிவு, எதுவும் எதுவும் ஜவஹரின் வாலிபத்தைத் தகர்க்கவோ, முதுமையைத் திணிக்கவோ முடியாது போய்த் தோற்றன; அந்த ஜவஹரின் வாலிபம், திடீரென்று மங்கி, பத்தாண்டு சென்றால் மட்டுமே வரக்கூடிய அளவு முதுமை அவருக்குத் திடீரென்று ஏற்படும்படி, செய்ய முடிந்தது, பாழும் கவலையால்! வெள்ளையரின் கடுமையான பல அடக்குமுறைகளை விட அதிகமான கேட்டினை இந்தக் கவலையால் உண்டாக்க முடிந்தது.

மருதமரமேறிக் குதிக்கும் அஞ்சா நெஞ்சும், இளமையும் கொண்டவர் போல், பண்டிதர் ஆட்சிப் பீடம் ஏறினார்.—சர்வதேச அரசியல் சூழ்நிலையிலும் தாவிக் குதித்து விளையாடினார்— அவருக்குத் திடீரென்று 'முதுமை'!

எதிர்பார்த்ததற்கு நேர்மாறான நிகழ்ச்சிகளைக் காண நேரிடும்போது, முடியும் என்ற நம்பிக்கையுடன் ஒரு காரியத்தைத் துவக்கி இடையிலே, அந்தக் காரியம் மிகமிகச் சிரமமானது என்பதை அறியநேரிடும் போது, போட்ட கணக்குகள் பொய்யாகும் போது, விதைத்தது முளைக்காது போகும்போது, நண்பர்களிடமிருந்து பகை கிளம்பும்போது, தூய்மையும் தீட்டுகையில் வண்ணக் கலயம் உடையும்போது, சந்தனத்தை எடுத்துப் பூசும்போது, அது உடல் அரிப்பு மருந்தாக மாறும்போது, ரோஜாவில் இதழ்கள் முட்களாக மாறும்போது, வீணையின் நரம்பு அறுந்து, அறுந்த நரம்பு வேகமாகக் கண்ணில்பாயும்போது,—இளமையில் முதுமை வரத்தானே செய்யும்!

எவ்வளவு நம்பிக்கையுடன், அந்த நம்பிக்கையை ஊட்டும் எவ்வளவு சக்தியும் வசதியும் படைத்தும், பண்டிதர் அரியாசனம் ஏறினார்! இந்தியா மட்டுமா, ஆசியாவுக்கே அன்றோ

அவர் வழி காட்டுவார் என்றுரைத்தனர்—உரைக்கு ஏற்ப, ஆசியா மாநாடும் நடைபெற்றது. அவருடைய சகாக்கள், கவர்னர்களாயினர்! தங்கை, மாஸ்கோவில்! அண்ணன் தம்பிமார்போல் அரசியல் மூலம் உறவுபெற்ற தோழர்கள், ஐரோப்பிய அரசியல் அரங்குகளில்!! இவ்விதமான சூழ்நிலையில், எவ்வளவு நம்பிக்கை பிறந்திருக்கவேண்டும், என்னென்ன திட்டங்கள் மனதிலே மலர்ந்திருக்கவேண்டும், எவ்வளவு அழகழகான எதிர்காலச் சித்திரங்களைத் தீட்டி இருப்பார்! சுதந்திர இந்தியா சுபீட்ச இந்தியாவாக விளங்கும்; சுயராஜ்யம் சுகராஜ்யமாக விளங்கும்—என்றெல்லாம் கூறினரே. அவ்வளவும் எங்கே கொண்டு சென்றது.—இளமையில் முதுமை வந்துற்றது என்று, எதற்கும் கலங்காத படேல் கூறும் நிலையன்றோ பிறந்தது.

வாழ்த்துகிறோம்—பாராட்டுகிறோம்—என்று வெளி நாடுகளிலிருந்து, தந்திகள் வந்தன, பண்டிதருக்கு, பீடம் ஏறியபோது.

“வருக! விமானம் தருக! அகதிகளை வெளி ஏற்ற உதவுக—” இது தந்தியாகக் கிடைக்கிறது இப்போது. வடநாட்டில் ஓயாத தொல்லை—காஷ்மீரத்தில் சண்டை - உணவுக்கு நெருக்கடி—உடை உற்பத்தியில் தொல்லை—தொழிலாளர் துயரம்—ஒன்றல்ல இரண்டல்ல, ஓராயிரம், எதிர்பாரா தாக்குதல்கள், ஒருபுறம் இருந்தல்ல, எப்புறமிருந்தும், ஏக காலத்தில். மீராவைக் காணும் போது, சிரமப்பட்டு வருவித்துக் கொள்ளும் புன்னகை தவிர, பிற நேரமெல்லாம், “போட்ட கணக்குகள் பொய்க்கின்றனவே”—என்ற எண்ணம் அவரைக் குடைந்து கவலையை மூட்டி, முதுமையைத் தந்திருக்கிறது.

இளமை போயிற்று, இனி வாராது என்று முதுமையில் கவலையுடன் பாடிய புலவர் நிலை, எவ்வளவோ மேல்! இவர் நிலை, அதனினும், துன்பம் தருவது. இளமை முதுமையாகிறது இயற்கையையும்மீறி, என்பதுடன், என்ன செய்வது—எந்தக்காரியமும் வெற்றிகரக் கூடியதாக முடிவதில்லையே, என்ற ஏக்கம் தாக்கும் நிலை பிறந்திருக்கிறது. காஷ்மீரப் போர், கண் மூடிக் கண் திறப்பதற்குள் முடியும் என்றனர், நாள் ஒன்றுக்கு நாலரை இலட்சம் ரூபாய் கேட்கிறது, போர், கேட்டுக் கொண்டே இருக்கிறது. அகதிகளால் வந்த செலவு, அமோகமாகி விட்டது. நிதிமந்திரி நல்வாக்குத்தர மறுக்கவில்லை, ஆனால் நாட்டு மக்களுக்கு அவர் பேச்சு, கவலையைப் போக்குவதாக இல்லை. விடுதலை பெற்றநாடு, எதெதற்குப் பணம் செலவிட்டு, மக்கள் மனதிலே புதியதோர் எழுச்சியை, உண்டாக்க வேண்டுமோ, அதற்குச் செலவிடப் பணம் இல்லை. திட்டங்கள் உள்ளன, கட்டுக் கட்டாக! நிபுணர்கள் உள்ளனர், கனவுகள் கண்டவண்ணம்! உலகிலுள்ள பெரியநாடுகள், பார்த்த வண்ணமுள்ளன, பண்டிதரின் ஆட்சித்திறம் எப்படி இருக்கிறது என்று தீர்மானிக்க. இங்கோ ராணுவச் செலவு ஏறுகிறது—மேலும் மேலும் ஏறித் தீரவேண்டிய முறையில், பலதேவர் பேசுகிறார். இந்து-முஸ்லீம் என்ற பிணக்கின்போது, மாகாணங்கள் ஒன்றுபட்டுப் பேசுகின்றனவேயன்றி, மற்ற நேரங்களில், அசாம், வங்காளத்தை நம்ப மறுக்கிறது, வங்கத்தைப்பீகார்வெறுக்கிறது, மராட்டியம் மலரவேண்டும் என்றோர் எண்ணம் அரும்புகிறது, திராவிடம் விழித்தெழுந்து, எனக்கேனப்பா வீண் தொல்லை தரும் தொடர்பு என்று கேட்கிறது, இவ்வண்ணம் பலப்பல பிரச்னைகள்.

இந்நிலையில், காங்கிரஸ் தலைவராக இருந்த கிருபளானி, பச்சையாகவே கூறிவிட்டார், ஆட்சியின் போக்கு சரியில்லை—எனவே காங்கிரசின் தலைவராக இருக்கமுடியாது என்று. அவரால் அறிக்கை விடமட்டுந்தான் முடியும்—அதற்குமேல் ஏதும் செய்யாதபடி தடுத்துவிடக் காங்கிரசுக்கு வலிவு இருக்கிறது. உள்நாட்டவர், கிருபளானியின் அறிக்கையின் ஆழ்ந்த பொருளைச் சிந்திக்க முடியாதபடி, காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகள், தந்திரமாகப் பிரசாரம்செய்துவிட்டன. அந்த அளவு வரையில் வெற்றியுந்தான் காங்கிரசுக்கு. ஆனால் உலகம், இங்கு வெளியாகும் பத்திரிகைத் தலைப்புகளைக் கண்டு சும்மா இருப்பதில்லை—எனவே, கிருபளானியின் கண்டனம், உள்நாட்டிலே விலை போகாவிட்டாலும், வெளி நாடுகளில், காங்கிரசின் இன்றைய நிலையை அறிவிக்கும் கண்ணாடி ஆகிவிட்டது. இது விழாக் கொண்டாடும் காங்கிரஸ் இளைஞர்கட்குத் தெரியாது—ஆனால் பண்டிதர் இதன் பொருளையும் விளைவையும் நன்கு அறிவார்—எனவே அவர் ஆயாசமடையாமலிருக்க முடியாது. இதன்றி, சோஷியலிஸ்டுக் கட்சியினரின் பிரசாரம், காந்தியாரின் மகிமையையும் நேருவின் தீரத்தையும் அங்கமாகக் கொண்டே இங்கு நடத்தப்பட்டு வருகிறதென்றாலும், வெளி உலகில், காங்கிரசின் ஆட்சிப்போக்கு முதலாளித்துவத்தை ஆதரித்து, பிற்போக்காளர்களைத் தட்டிக் கொடுப்பதாக இருக்கிறது. இது தொழிலாளர்களுக்கு, மாணவர்களுக்கு, தீவிரவாதிகளுக்குப் பிடிக்கவில்லை, எனவே அவர்கள் தனியாகச் சென்று புதிய கட்சி துவக்குகிறார்கள் என்ற எண்ணத்தைஉண்டாக்கி காங்கிரஸ், ஏறத்தாழ, பிரிட்டனில் உள்ள கன்சர்வேடிவ் கட்சி போன்றதே என்று எண்ணச் செய்கிறது. இந்த எண்ணம் வளருவது நல்லதல்ல என்பது, காங்கிரஸ் இளைஞர்கட்குத் தெரியாது, பண்டிதருக்கு நன்றாகத் தெரியும்—எனவே அவருக்கு இந்த நிலை கவலையை உண்டாக்குகிறது. எனவேதான் அவருக்கு, இளமையில் முதுமை எதிர்பாராவிதமாகஏற்பட்டிருக்கிறது.

கோட்டுமுரசெனக் கூறினேன் அந்தோ
வேட்டுவர் தலைகளை என்றறியாமல்
திட்டம் தீட்டிடின் திக்கெலாம் ஒளிஎன
நம்பினேன், இன்றோ நாச இருள் நிலை,
மோசம் இவ்வாட்சி, மொழிகிறார் நண்பர்
பாசம் அற்றது, பகர்கிறார் பலரும்

இதுபோல் கூறிக்கசிந்துருகும் நிலையில் பண்டிதர். இது, சங்கச் செய்யுள் மூலம், நாம் காணும், முதியவர்கண்ட இளமை நினைப்பைப் போன்றதல்ல, மனதை மருட்டக்கூடியது, முதுமையை, பருவ மாற்றம் என்ற பொருளிலிருந்து, நோய் என்ற பொருளுக்குக் கொண்டுவந்து விட்ட நிலை.

அஜீரணம் — சகலநோய்களுக்கும் அடிப்படை என்கின்றனர் மருத்துவமுறை அறிந்தோர். அளவு அதிகமாவதும், உண்ணும் பொருளின் தன்மை உடலுக்கு ஊறுதேடுவதாக இருப்பதும் அஜீரணமூட்டும். தேனெனினும் அளவு கெடுவது, கேடுதான் — செங்காய் சிறிதளவு

கொள்ளினும் கேடுதான். உடலுக்கு ஊறு இங்ஙனம் நேருவது போலவே, உள்ளத்தைத் தாக்கி, எண்ணத்தைக் குழப்பி, இளமையில் முதுமை வரச் செய்யும் கேட்டுக்குக் காரணமும், அரசியல் துறையில் ஏற்பட்டுள்ள அஜீர்ணம். இதனை அறிய மறுப்பர் அன்பர்கள், தமது ஆசாபாசத்துக்கு, இது தடையாகுமே என்ற காரணத்தால். இப்போது, பண்டித ஜவஹர் தமது சகாக்களுடன் சேர்ந்து, மேற்போட்டுக் கொண்டுள்ள பொறுப்புகள், கவலைகள், தொல்லைகள், அல்லல்கள், அளவுக்கு மீறினவை—அஜீர்ணம் ஏற்படுத்தக் கூடியன. உலகுடன் தொடர்பு பற்றியபிரச்னை முதற்கொண்டு, உழக்கரிசியை அளந்து கொடுக்கும் பிரச்னை வரையிலே, இன்று, பண்டிதரின் சர்க்கார், தன்கரத்தில்கொண்டிருக்கிறது; அச்சுமுறியும் அளவுக்கு, வண்டியிலே பாரம்! ஆகுமா இந்நிலை! அசாமிய தேயிலைத்தோட்டப்பிரச்னை முதற்கொண்டு, கொடைக்கானல் காப்பித்தோட்டப் பிரச்னைவரையிலே, தங்கள் மேற்பார்வை இருக்கவேண்டுமென்று, அதிகாரத்தை வைத்துக்கொண்டுள்ளனர். மாகாண முதலமைச்சர்கள், 'தபாலை' எதிர்பார்த்து, தகவல் தருகிறார்கள் தமது நேரடியான ஆளுகைக்கு உட்பட்ட மக்களுக்கு. இவ்வளவு, 'அதிகாரக்குவியல்' சாதாரண நிலைமையையே குழப்பக் கூடியது — இப்போதுள்ள குழப்ப நிலையில், என்ன நேரிடும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டாமா! ஒவ்வொரு மாகாணமும் அதனதன் காரியத்தைக் கவனித்துக் கொள்வதற்கு ஏற்ற வசதியும் திறமையும் கொண்டே இருக்கிறது—வாய்ப்புத் தரப்படவில்லை. இதனால் மாகாணங்களின் நலன் கெடுகிறது என்பது ஒருபுறமிருக்க, மத்தியசர்க்காருக்கு எவ்வளவு 'சுமை' ஏறுகிறது, என்பது, மிகவும் கவனிக்கப்படவேண்டிய விஷயம்—அஜீர்ணம் உண்டாகி விட்டது. தொழில் முன்னேற்றம் முதற்கொண்டு, தொல்லைகளைத்தடுப்பது வரையிலே, ஒவ்வொரு மாகாணமும், தன்காரியத்தைச் செவ்வனே செய்துகொள்ள முடியும். எல்லாவற்றையும் எடுத்துத்தன் தலைமீது போட்டுக்கொண்டு, வலியால் வதைவானேன், வயோதிகம் இளமையில் புகுவானேன்! இந்த உபகண்டத்துப் பழம் சாம்ராஜ்யக் கதைகளைப் பார்த்தால், இந்த அஜீரணம் எவ்வளவு பெரிய ஆபத்துகளை உண்டாக்கிற்று என்பதை அறிந்துகொள்ள முடியும். அவுரங்கசீபின் ராஜ்யம் கெட்டதற்குக்காரணம் என்ன? மத்திய சர்க்கார், சகல அதிகாரத்தையும் தன் வசம் வைத்துக்கொண்டு, தாங்கமுடியாத பொறுப்புப்பளுவால் தகர்ந்து போயிற்று. இப்போது, பண்டிதரின் சர்க்கார் உலகில் மற்ற இடங்களிலே எல்லாம், எந்த முறையைத் தேவையற்றது என்று விட்டுவிட்டார்களோ, மத்ய சர்க்காரிடம் சகல அதிகாரங்களையும் குவித்து வைத்துக்கொள்வது, என்ற முறை (OVER CENTRALISATION) யையே, தங்களுக்கு உகந்தது என்று, தவறாகக் கருதிவிட்டனர்—அஜீர்ணத்தால் அவதியுறுகிறார்கள்.

பலம் பொருந்திய மத்திய சர்க்கார் வேண்டும் என்ற திட்டம் ஜனநாயக முறையிலே, உள்ள, ராஜாதி ராஜ ராஜமார்த்தண்டம்! எங்ஙனம், குடிஅரசு முறை அரும்புவதற்கு முன்பு, அரசன், சகல விஷயங்களுக்கும் பொறுப்பேற்று நடத்தி வந்தானோ, வெளியார் படைஎடுப்பைத் தடுப்பதிலிருந்து வெளியூர் சென்றிருந்த கணவனின்பொருட்டு, அவன் இல்லத்தைக் காத்துவரும் காரியம் வரையிலே செய்துவந்தானோ, அதுபோல ஜனநாயகத்தின் பாலபாடம் மட்டுமே தெரிந்திருந்தபோது, ஏற்பட்ட முறை, பலம் பொருந்திய மத்ய சர்க்கார் வேண்டும் என்பது. நடைமுறையிலே இது, மத்தியசர்க்காரைப் பாரத்தால் வளைத்து, மாகாணங்களைப் பட்டினி போட்டு வதைத்து, இரண்டும் கெட்ட முறையாக முடிவதைக் கண்ட அரசியல் அறிஞர்கள், இந்த முறையைக் கண்டித்து, ஏதோ சில குறிப்பிட்ட, கூட்டு முயற்சியாலன்றித் தனியாகச் சாதிக்க முடியாத அலுவலுக்கு மட்டும் மத்ய சர்க்காருக்குப்பலமும், அதிகாரமும் இருக்கவேண்டுமேயொழிய, தொட்டதற்கெல்லாம், மத்ய சர்க்கார் என்ற நிலை கூடாது என்று அறிவுறுத்தினர். ஆங்கிலேயர், அன்னியர்-அடக்குமுறைக்குச் சவுகரியமாக, மத்ய சர்க்காரைப் பலமுள்ளதாக்கினர்—நமக்கு அது தேவையுமில்லை, நன்மையும் பயக்காது. இதனை உணர மறுக்கத்தான் முதலிலே எண்ணம் பிறக்கும். சகஜம். ஏனெனில், "அனைவரும் என் ஆணைக்கு உட்பட்டவர்கள்-எந்தக் காரியமும் என்னைக்கேட்டுத்தான் செய்யவேண்டும்—மூலபலம் நானே—அதிகாரத்தின் ஆதியும் அந்தமும் நானே" என்று கூறிக்கொள்வதிலே, மத்ய சர்க்காரில் நடுநாயகமாக அமருபவருக்கு அலாதி சந்தோஷம் இருக்கத்தான் செய்யும். ஆனால், அந்தச் சந்தோஷம், சபலம் — இளமையில் முதுமையைத் தந்தது.

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை, இன்று சுதந்திர நாடுகளாக்கி விட்டனர் பிரிட்டிஷார். ஏன்? யூகம்! கட்டி ஆளமுடியாது—கட்டி ஆள்வதிலே இலாபம் இல்லை—கட்டிஆள்வதால் வீண் தொல்லை வருகிறது—கட்டுக்கு உட்பட்டிருக்க மாட்டார்கள்—என்பவைகளைத் தெரிந்து கொண்டனர்-அஜீர்ணத்தைப் போக்கிக்கொண்டனர். ஆனால் இங்கு பண்டிதரின் சர்க்கார் அந்த நோயை வரவேற்றுக்கொண்டது. நல்லெண்ணத்துடனேயே கூறுகிறோம்; இந்த அளவு அதிகாரம், நிச்சயமாக கேடு பயக்கத்தான் செய்யும் — பண்டிதருக்கு, திடீரென முதுமை கண்டிருப்பதற்குக் காரணம் இதுதான்.

தொடித்தலை விழுத்தண்டினார் போல, இயற்கையின் முறைப்படியே, இளமை போய், முதுமை வந்துற்ற நிலையே, ஏக்கத்தைத் தருகிறது என்றால், இளமையில் முதுமை, எவ்வளவு துக்கத்தைத் தந்திருக்கும், பண்டிதருக்கு. மருதம் ஏறி மடுவில்குதித்து மகிழ்ந்து மகளிரோடும் விளையாடி, பிறகு, தண்டு கொண்டார், அதுவே கவலை தருகிறது; இங்கோ, பண்டிதர், மருதம் ஏறி மடுவில் குதித்து, எழுந்திருக்கும்போது, இளமை போய், முதுமை பெற்றிருக்கிறார். கவிபாட அறியாததால், இந்த நிலைபற்றி, என்ன முறையில் கூறுவதென்றறியாது திகைக்கிறோம்.

உயர்சினை மருதத் துறையுறத்
தாழ்ந்து
நீர்நணிப் படிகோடு ஏறிச்சீர்மிகக்
கரையவர் மருளத்
திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத்
துடுமெனப்பாய்ந்து
குளித்து மணற்கொண்ட
கல்லா இளமை
அளிதோதானே யாண்டுண்டு
கொல்லோ
தொடித்தலை விழுத்தண்டூன்றி
நடுக்குற்று

இருமிடை மிடைந்த
சிறுசோல்
பெரும் மூதாளரேமாகிய
எமக்கே

என்பது, புறநானூறில் உள்ள செய்யுள். முதியவர், இளமை எங்கு சென்றதோ என்று ஏக்க முற்றதை எடுத்துக்காட்டும்பகுதி. இளமையில் முதுமை பெற்றதைக்கூற, சிறிதளவு திருத்தத்துடன், இதனையே பயன் படுத்த எண்ணுகிறோம்.

உயர்சினை மருதத் துறையுறத்
தாழ்ந்து
நீர்நணிப்படிகோடு ஏறிசீர்மிகக்
கரையவர் மருளத்
திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத்
துடுமெனப்பாய
தோடித்தலை விழுத்தண்டூன்றி
நடுக்குற்று
இருமிடை மிடைந்த
சிறுசோல்
பெரும் மூதாளராகினேன்,
என்கோல், நிலையே!

[மருதம்—ஓங்கி வளர்ந்த மரம்— இந்திய துணைக்கண்டம். குட்டம்— குளம்—அரசியல் அதிகாரம்.]

இங்ஙனம் கூறிக்கலங்கும் நிலையை மாற்றிக்கொள்ள மார்க்கம் இல்லாமற்போகவில்லை. எல்லா அதிகாரமும் ஓரிடத்தில் குவிவது என்றதிட்டத்தை நீக்கிவிட்டு, அந்தந்தத் தரணியை ஆங்காங்கு அவையும்துரைத்தனத்தின் பொறுப்பாக்கி, அரசியல் அஜீரணம் ஏற்படமுடியாதபடி செய்துகொண்டால், இடர்ப்பாடு இராது. ஆனால், அந்த எண்ணம் எங்கே, விரைவில் தோன்றப்போகிறது!

"இனியும் இந்தியா துண்டாடப்படுவதை நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை"

என்று சர்தார் பேசுகிறார்—அதே ரிகார்டை டாக்டர் சுப்பராயனும் போட்டுக்காட்டுகிறார்—இங்கு! துண்டாடுவது — என்ற பதம், மக்கள் மனதிலே, தவறான கருத்தை ஊட்டும். கேட்பது துண்டுபோடுவது அல்ல —அஜீரணம் வேண்டாம், அளவறிந்து உண்டு, இடமறிந்து நடந்துகொள், என்பது திட்டம். துண்டாடுவது, என்று அதைத்திரித்துக் கூறுகிறார் சர்தார். திராவிட நாடா?—தரமுடியாது! மராட்டியமா? கேட்காதே! மாகாண சுதந்திரமா? பேசாதே! — என்ற முறையிலே சர்தார் பேசுகிறார்—இந்தியாவைத் துண்டாட நாங்கள் அனுமதியோம்! அந்த முழக்கத்திலே, வீரம் தொக்கிஇருக்கிறது—விவேகம் அல்ல! அந்த முழக்கத்துக்குத்துணையாக பெரும் பட்டாளம் இருக்கிறது, அறிவாதாரம் இல்லை. அந்த முழக்கம்கேட்டு, நாம் ஆச்சரியப்படுவோம், அஞ்சிக்கிடப்போம் என்று அவர் கருதுகிறார். ஆனால், அந்த முழக்கம், இதற்கு முன்பு வேறு எங்கோ நாம் கேட்டுப் பழக்கப்பட்டதுபோலத் தெரிகிற காரணத்தால் ஆச்சரியமும் ஏற்படவில்லை, அச்சமும் பிறக்கவில்லை. ஆம்! "நான் தலைவனானது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக்கலைப்பதற்கு அல்ல!" என்று சர்ச்சில் முழக்கம் செய்தார் — சாம்ராஜ்யம் கலைந்துவிட்டது!!

*

## வாழ்க்கை ஒப்பந்தம்.

காஞ்சிபுரம் தோழர் C. இராசாபாதர், ஆரணி தோழியர் பேபி அம்மாளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்ட திருமண நிகழ்ச்சி 18-1-48-ல நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் அ. க. தங்கவேலர், குருசாமி, பி. ஏ; குஞ்சிதம் பி.ஏ;எல்.டி; அன்பழகன் எம். ஏ; கலியாணசுந்தரன், அண்ணாத்துரை ஆகியோர் சீர்திருத்தத் திருமணம் பற்றிச் சொற்பொழிவாற்றினர். திருமணத் தம்பதிகளுக்குப் பல பரிசுகள் வழங்கப்பட்டன. மணமகனின் நன்றிகூறலுடன் நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

## செங்கல்பட்டு டிஸ்டிரிகட்டு ஜட்ஜிகோர்ட்டு.

S. C. O. P. No. 1. Of. 1948.

இறந்துபோன ராகவசெட்டியாருக்கு வரவேண்டியகடன் விஷயம்:— பெரிய காஞ்சீபுரம், சாலத்தெருவு, 109-ம் நெம்பர் வீட்டிலிருககும், C. V. ஸ்ரீராமுலு செட்டியார் பாரியாள் சரஸ்வதி அம்மாள்
—மனுதார்.

### நோட்டீசு.

மேல்படி மனுதார் இறந்துபோன — ராகவசெட்டியாருக்கு, சேரவேண்டிய கடனை வசூல் செய்யவார்சு சர்டிபிகேட்டு பெறமனுகொடுத்து ஷை மனு 2-2-1948 வாயிதா போடப்பட்டிருக்கிறது ஆக்ஷேபனை உள்ளவர்கள் வாயிதாதேதி ஆஜராய் ஆக்ஷேபனையை சொல்லிக்கொள்ளலாம். ஏ. ஜி ரங்காச்சாரியார்

22-1-48. மனுதார் அட்வகேட்

## செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்ட்டு.

AS No. 276/1947

C. M. பழனிசாமிசெட்டியார்
அபீல்வாதி

வாசுதேவ செட்டியார்
2ம் அபீல் பிரதிவாதி.
இறந்தார் ஷெயார்
வார்சுகள் கர்ணப்பாள். 1.
மைனர் அப்பாவு செட்டி
By guardian and mother
கர்ணம்பாள்—2
கருங்குழி—மதுராந்தகம் தாலூக்கா.
7 & 8 அபீல் பிரதிவாதிகள்.

ஷெயார்களுக்கு அறிவிப்பதாவது உங்களை இறந்துபோன வாசுதேவ செட்டியாருக்கு வார்சாக சேர்க்க மனு கொடுத்து 31—1—48உ வாயிதா போட்டிருக்கிறது அறியவும்.

D. K. Varadachariar.
அப்பீல் வாதி வக்கீல்
செங்கல்பட்டு. 20—1—48


# கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடகசபா

திருச்சி ரத்தினவேலு தேவர் ஹாலில்
27—1—48 செவ்வாய் முதல் தினசரி

# "மணமகள்"

By S. K. சாமி
பாடல்கள் :— நாரா. நர்ச்சியப்பன்.
புதன், ஞாயிறு, மாலை 6-30 மற்ற நாட்கள் இரவு 9-30.
திங்கள் நடகமில்லை.

## புதிய சமூகம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

டும்; புதைந்து கிடக்கும் செல்வங்களைத் துய்க்கவேண்டும், கற்பனைக் கெட்டாக் கவிதையைப் புனைய வேண்டும்; ஓவியம் தீட்டவேண்டும்; நாடகம் பயில வேண்டும்; இசை நுகரவேண்டும்; காவியம் ஆக்க வேண்டும்; இன்பத்தில் திளைக்க வேண்டும்; இன்றியமையாத ஊணுக்கும்உடைக்கும் வீட்டுக்கும்மட்டுமே வாழ்க்கையைத் தொலைக்கக்கூடாது —என்று எண்ணுபவன்.

நான் நாகரிகன். என்மனம் களங்கமற்றது. உள்ளதை உள்ளபடி வெளியிடும் பண்பு படைத்தவன். எனவே, இக்குறை மலிந்த—சீர் இழந்த சமூகத்தை வெறுக்கிறேன், திருத்தி அமைக்க முயல்வேன், என் எண்ணம் கை கூடும் என்ற உறுதி உண்டு எனக்கு.

திருத்தி அமைக்கப்பட்ட சோஷலிஸ்ட் சமூகம் எத்தன்மையது?

முதன்மையாக, மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழ்வர். ஒவ்வொருவனும் தன் மனவளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் கொடுப்பாரும் கொள்வாருமின்றி தங்கு தடையின்றிப் பெருக்கவழியுண்டு.

இரண்டாவதாக, சமூகத்தில் வர்க்கங்கள் இரா. எனவே வர்க்கப் போர் இராது. கருத்து வேற்றுமைகள் குறிக்கோள் வேற்றுமைகள் இரா.

சமூக நலனே பொதுவான குறிக்கோள்.

மூன்றாவதாக, உடையோரும் உழைப்போரும் இன்றி, அனைவரும் உழைப்போர் ஆவர். உற்பத்திசாதனங்களின் உடைமை சமுதாயத்திற்கே பொதுவாகும். ஒருவன் தன் உடைமையில் பிறரை உழைக்கச் செய்து அவ் உழைப்பின் பயனை சும்மா இருந்து அடைவது இயலாது.

நான்காவதாக, பண்ட உற்பத்தி நாட்டு மக்களின் நலன் கருதி இயங்கும், இலாபம் கருதி இயங்காது. இலாபம் என்பது பொருளற்ற சொல் ஆகிவிடும். தேவையே, இன்னின்ன பண்டம் இவ்வளவு வேண்டுமென நிர்ணயிக்கும். அதற்கு ஏற்றப்போல்திட்டம்வகுத்துப்பண்டம் உண்டாக்குவர். கொள்முதல் விற்றுமுதல் பண்ட உற்பத்தியைப் பாதிக்காது.

ஐந்தாவதாக, அனைவரும் தத்தம் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவர். அவ்வுழைப்பும் சமூகத்திற்கு அவசியமான உழைப்பாக இருந்தாலே ஊதியம் கிடைக்கும். வீணருக்கும் சமூகப் புல்லுருவிகளுக்கும் இடம் இராது.

ஆறாவதாக, சமூகம் இக்கொள்கைகளை ஒட்டி அரசியல் அமைக்கும். ஒடுக்குதலும் ஒடுங்குதலும் இல்லாத இவ் அரசியலுக்குத் தொழில் வகுத்தலும் பண்ட உற்பத்தியை நிர்ணயித்தலும் அவற்றைப் பகிர்ந்து அளித்தலுமே தொழில்களாகும். சமூகத்தில் இவ் எண்ணம் நிறைவேறத் தடைசெய்வோர் பழைமைநாற்றத்தால் சில ஆண்டுகளுக்கு ஊறு நிகழ்த்தலாம்; அவர்களைச் சமூகம் வெறுக்கும். அதன்பின், பொதுவாக சமூக நலனை அனைவரும் அறிந்து தனி உடைமையின்றி வாழும்போது அரசியல் எதிர்கால வேலைகளை நிர்ணயித்தலோடு அமையும். சட்டம், போலீஸ் அடக்குமுறை, சிறை, நீதி செலுத்தல், திறைதிரட்டல்போன்றவற்றிற்கு இடம் இராது. இடைக்காலத்திலிருந்த அரசு நாளடைவில் உதிர்ந்துவிடும். படை தற்காப்புடன் அமையும். இவ்வரசு பிறநாடுகளை வெறுத்தலில் ஈடுபடாது. தன் நாட்டில் சோஷலிஸம் நிலவும் வரையேனும் பிறநாடுகளில் அவசியமின்றித் தலையிடாது. தன்மக்களின்வாழ்க்கை நிலை உயர, மேலும் மேலும் உயர, ஒவ்வொரு நாளும் பாடுபட வேண்டியதால் பிறநாடுகளைக் கவருதலில் பயன் உண்டெனக் கருதாது. பிற நாடுகள் தன்னைத் தாக்குங்கால் தன் நாட்டு மகன் ஒவ்வொருவனும் மகள் ஒவ்வொருத்தியும் சமூக நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளப் போர் புரிய முன்வருவர். ஆதலின் அவர்க்கு படைப்பயிற்சி அளிக்கும். ஆனால், பெரியநிரந்தரப்படை வைத்திராது. பிறநாடுகள் தம் சிறுபான்மை முதலாளிகளைத் தூக்கி எறிந்து மக்கள் ஆட்சி நிறுவினால் இப்படையும் அவசியமிராது. மக்கள் உழைப்பு அனைத்தும் மக்கள் ஆக்கத்திற்கே பயன்படும், அழிவுக்குப்பயன்படாது.

ஏழாவதாக, மக்கள் அறிவு வளரும்; கலை வளரும்; நாகரிகம் வளரும்; அறிவியல்நூல் வளரும், இன்பம் பெருகும். துய்ப்பும் நுகர்ச்சியும் அனைவர்க்கும் பொதுவாகும். சிறுபான்மையோர் அவற்றைக் கொண்டிருப்பதுபோகும். நாட்டின் செல்வம், இயற்கைவளம், செயற்கைப்பொலிவு,கலைப்பண்பாடியாவும் யாவர்க்கும் பெறல் எளிதாகும். அவற்றை வளர்க்க யாவர்க்கும் வாய்ப்புக் கிடைக்கும். அவையாவும் பெருகும். யாவரும் தம் சிந்தனையை அவற்றின் மேல் தேக்குவதால், ஓவியம், சிற்பம், காவியம், இலக்கியம், விளையாட்டு, அறிவியல் நூல்,யாவும் பெரும்பான்மையோர் வாக்கிலும் அகத்திலும் வாழ்விலும் விளையாடிப் பெருமையுறும்.

எட்டாவதாக, இலாபநோக்கம் இன்மையால், மக்கள் பொய் கூறக் காரணம் இராது; ஒருவரை ஒருவர் ஏமாற்ற அவசியம் இராது; பண்டங்களைப் பதுக்கிவைக்க வேண்டியதில்லை. நற்குணங்களாகிய நாணயம், தன்னலமின்மை, உண்மை, அன்பு, தூய்மை வளரும். மக்கள் தம்மில் தாம் கொண்ட நம்பிக்கையாலும் பிறனிடம் கொண்ட நம்பிக்கையாலும் உயர்வர். கருத்து முற்றும் சமூக நலனில் தோய்வதால், சமூக நலனுக்கேற்ற பண்புகள் உயர்ந்து இழிந்த பண்புகள் தாழும்.

ஒன்பதாவதாக,மதங்களும், மூட நம்பிக்கைகளும் அவற்றை ஒட்டிய ஏமாற்றமும் இரா. பகுத்தறிவை ஒட்டிய சமூக வாழ்க்கையையே ஒவ்வொருவரும் நடத்துவர். விதியும் கடவுளும் மக்களை இயக்கா. தன் வாழ்க்கைக்கு வேண்டிய தத்துவ ஆராய்ச்சியில், அவனவன் விரும்பிய தத்துவ ஆராய்ச்சியில், தன் ஓய்வுகாலத்தில் ஈடுபட ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு. அதனால், பிறரை ஏமாற்றமாட்டான். ஏமாற்ற முயன்றால் மட்டுமே ஒதுக்கப்படுவான். கடைசியாக, இத்தகைய சமூகத்தில் அனைவரும் உழைப்பர்; உற்பத்தி பெருகும்; உழைப்பின் பயனைக் கவருபவர் இன்மையால் உழைப்போர் ஊதியம் பெருகும். வேறு வர்க்கத்தினருக்காக உழைக்காது சமூகத்துக்காக உழைக்கிறோமென்ற உணர்ச்சி மிகுதியால உற்பத்தியில் ஏற்றம் உண்டாகும். அறிவியல் நூல் வளரும். புதுச் சாதனங்கள் கண்டுபிடிக்கப்படும். பண்ட உற்பத்தி மிகமிக, மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அதிகமாக,

மக்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் என்ற நிலைமை மாறி, மக்கள் தேவைக்குத் தகுந்த ஊதியம் என்ற நிலை உண்டாகும். எடுத்துக் காட்டாக, மின்சார சக்தி பெருக, தேவைக்குத் தகுந்த விளக்குகளோ, அடுப்புகளோ ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ள இயலும்; பால் உற்பத்தி பெருக, தேவைக்குத் தகுந்த பால் ஒவ்வொருவரும் பெற இயலும். இந்நிலைமையேகம்யூனிஸம் என்பது. இவ்வகை உயர்ந்த சமூகமே கம்யூனிஸ்ட் சமூகம். இத்தகைய சமூகம் உயர்ந்தது; விரும்பத்தக்கது; அதை உண்டாக்க அனைவரும் முயலுதல் நல்லது என்பதை யாரும் மறுக்க முடியாது.

## உணவு நிலைமை

ஜனவரிமாத இறுதிக்குள் குறைந்தபட்சம் 64,000 டன் அரிசியாவது அனுப்பியாகவேண்டும். தென் ஜில்லாக்களுக்கும், மலபாருக்கும், உணவுப் பொருள் தருவது கஷ்டமாகிவிட்டது. மாகாணத்துக்குத் தேவையான அரிசியின் அளவில் 15 இலட்சம்டன், துண்டுவிழுகிறது.

சென்னை முதலமைச்சர், மத்திய சர்க்காருக்கு, இந்தத் தகவல்களைத் தந்திமூலம் தெரிவித்திருக்கிறார்.

அருப்புக்கோட்டை, அனந்தபூர், நரசாபூர், பீமாவரம்—என்று பல பகுதிகளைக் குறிப்பிட்டு, இங்கெல்லாம் பஞ்சம் தலைகாட்டுகிறதுஎன்று ரெவன்யூ மந்திரி அறிக்கை விடுத்திருக்கிறார்.

இப்போது சர்க்காரிடம் உள்ள உணவுப்பொருளின் அளவு குறைவாக இருப்பதால், இப்போதும்தரப்படும் 8 அவுன்சு ரேஷனும், குறைக்கப்படக்கூடும் என்று, விஷயமறிந்த வட்டாரத்தில் பேசிக்கொள்ளப்படுகிறது.

✲

# அறிவாலயம்



நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள், சிற்பக்கலையின் சிறப்புக்கு, அழிக்கமுடியாத சின்னங்களல்லவா!—என்று இங்கு ஆலயங்களைப்பற்றிப்புகழ்கின்றனர்—அங்கு வௌவால் வட்டமிடுவதுபற்றியும் வஞ்சனை ஆட்சி புரிவது குறித்தும் மறந்து.

இதோ ஓர் அறிவாலயம் — ஆராய்ச்சிக்கூடம் —பிரிட்டனில் உள்ளது. பிரிட்டிஷ் கண்காட்சிச் சாலையில் ஓர் பகுதி—இது, கடந்த ஜெர்மன் சண்டையின்போது குண்டுவீச்சுக்கு இலக்காயிற்று. இப்போது செப்பனிட்டுவிட்டனர்.

இந்த அறிவாலயத்தில் 50 இலட்சம் புத்தகங்கள் உள்ளன—யாரும் இங்கு சென்றுபடிக்கலாம்.

இவ்வளவு பெரிய அறிவாலயத்தைக் காத்துவருவதன்மூலம், ஆராய்ச்சி மனப்போக்கை வளர்க்கிறார்கள்—நாட்டு மக்களின் நல்லறிவு வளருகிறது.

அறிவாலயங்கள், அங்கு! இங்கோ அர்ச்சனை செய்துவிட்டு அஷ்ட- ஐஸ்வரியத்தைப் பெறுவோம் என்ற அவாவுடன் பக்தர்கள் சென்று, வாணிபம் நடாத்தும் ஆலயங்கள்!!

# ★ ரங்கோன் ராதா ★

—✲—

[* நீண்ட நாட்களுக்குப் பிறகு, மீண்டும் ராதா. மன்னிப்புக் கோருகிறேன்.

தொடர்பு அற்றுப் போயிருக்குமோ என்று அஞ்சுகிறேன். எனினும் ஓர் நம்பிக்கை — கதையின், முக்கிய பகுதியான, ராதாவின் தாயாரின் துயர்மிக்க வரலாறு முழுவதும், வெளியாகி, ராதாவின் கல்லூரி வாழ்க்கையைப்பற்றிய குறிப்பு எழுதத் தொடங்கியபோது, தொடர் கதை வெளிவருவது, நிறுத்தப்பட்டது—இதனை நினைவூட்டினால், தொடர்பு விளங்கிவிடக்கூடும் என்பது என் நம்பிக்கை.

கல்லூரியில், ராதா, தாரா நாடகம் நடத்திக்கொண்டிருக்கிறாள். தாராவாக, ராதாவே நடிக்கிறாள். அந்த நாடகக் கருத்தும், காட்சியும், புதுமை நிரம்பியதாக இருக்கக் கண்டு, அனைவரும் மகிழ்கின்றனர்.

வாசகர்களின், அந்த மகிழ்ச்சியை, மாய்த்திடுவதுபோல, அந்தப் பகுதியிலே கதையை நிறுத்தினேன்.

இனி, அதன் தொடர்ச்சி.]

C. N. A.

பார்க்கப் பார்க்க, தாரா நாடகம் புதுமை நிரம்பியதாகக் காணப்பட்டதுடன், ராதாவின் மனப்போக்கைச் சித்தரித்துக் காட்டுவதற்காகவே திட்டப்பட்டதுஎன்று எண்ணமும் ஏற்படச்செய்தது. ஒவ்வொரு காட்சி மூலமும், ராதா, தாராவின் மனப்போராட்டத்தையும், சந்திரன் காதல் வேகத்தால் தன்னைத்தானே இழந்துவிடும் நிலைக்குச் செல்வதைத் தடுக்கவேண்டும் என்று எண்ணுவதையும் சித்தரிப்பதாகவே இருந்தது.

ஒரு காட்சியை என்னால் என்றுமே மறக்கமுடியாது. தாராவும் அவளுடைய தோழியும் பேசிய காட்சி அது.

"ஆண்கள், மகாவீரர்கள் என்கிறார்களே, அதுபொய்யடி,பொய்!" என்று தாரா கூறினாள் சிரித்துக் கொண்டே.

"அற்புதமான கண்டுபிடிப்போ! வீராதிவீரன் என்று விருதுபெற்றவரானாலும் வேல்விழி மாதரிடம் மண்டியிடுபவர்தான் ஆடவர் என்பது, யாரறியாதது, புதிதாகக் கண்டறிந்து கூறுகிறாயோ?" என்று கேட்டாள் தோழி.

"அது மட்டும் அல்ல! காதலிக்கும்போதுகூட, ஆடவர் கோழைத்தனத்தைக் கைவிடுவதில்லையடி. சந்திரன் என்மீது, எவ்வளவு காதல் கொண்டிருக்கிறான் — அப்படிப்பட்டவன்—எவ்வளவு பயப்படுகிறான் தெரியுமோ?" என்று கேட்டாள்.

"ஓஹோ, அதைத்தான் நீ கோழைத்தனம் என்றுகூறுகிறாயோ! பாபகாரியம் புரிய அஞ்சுபவன், கோழையா! என்ன, தாரா! வரவர உன் புத்தி இப்படிக் கோணலாகி விட்டது!" என்று கண்டிக்கும் முறையிலே கூறினாள் தோழி. அப்போது, ராதா, (தாரா வேடத்தில்) ஒரு பார்வைபார்த்தாள்,தோழியை. ஆஹா! அந்தப் பார்வை என்னென்ன பேசிற்று தெரியுமோ! ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் கூடப் பேசலாம், அந்த ஒரு பார்வையின் பொருளைப்பற்றி. அப்படிப்பட்ட அபூர்வமான பார்வை அது. தோழி, பயந்தே போனாள். "தாரா! விபரீதமாக எதுவும் செய்துவிடாதே" என்று எச்சரித்தாள் தோழி. நடந்த விபரீதகாரியந்தான், தெரிந்ததாயிற்றே. அதற்குத் தாராவின் தனிமொழி மூலம் தரப்பட்ட விளக்கம்தான், புதுமையானது.

தாரா, உலவுகிறாள் — விபரீதம் நேரிட்டான பிறகு—தனியாக.

அவள் முகத்திலே புன்னகை தவழ்ந்தபடிதான் இருக்கிறது — ஆனால் அன்றலர்ந்த மலருமல்ல, வாடிய மலருமல்ல, இரண்டுக்கும் இடையே உள்ள நிலையிலான மலர் போல் முகம்.

வழியிலே, இருபுறமும் இருந்த செடிகளின் தளிர்களைப் பறிப்பதும் வீசுவதுமாக, எழுத்தற்ற ஆனால் இனிமையுள்ள இசை ஒலியுடன் செல்கிறாள்.

ஒரு புன்னை மரத்தடியிலே உட்காருகிறாள். பிறகு பேசுகிறாள்.

"சந்திரா! பழி முழுவதையும் நான் ஏற்றுக்கொண்டேன் — அல்லவா! — நானாக — மனமுவந்து — துணிந்து—விளைவுகளைக்கூடக் கவனியாமல். ஏன்? அந்த இரகசியத்தை உலகம் எங்கே அறியப்போகிறது.

நீ, என்மீது கொண்டிருந்த காதல், உன்னைச் சில நாட்களில் தீய்த்துவிட்டே இருக்கும். பாபம்! நீயோ, கோழை! கனி, தானாகக் கரத்தில் வந்து விழட்டும் என்று காத்திருக்கும் முடவன்போல இருந்தாய்.

'சந்திரன், என்ன செய்தான் தெரியுமா! குரு பத்னியை..........' என்று, தேவலோகம் பேசுமே, என்று அஞ்சினாய்.

அந்த அச்சம் இருந்ததே தவிர, குருபத்னியிடம் காதல் கொள்ளலாமா, என்ற எண்ணம் மட்டும் பிறக்கவில்லை.

ஒருநாள், நான் தீர்மானித்தேன், "ஓஹோ, சந்திரன், பழி நமக்கும், பலன் தனக்கும் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறான். அவனுடைய கோழைத்தனம், ஆடவருக்குள்ள சுபாவத்தின் சாயல்தான்;சரி நானே பழியை ஏற்றுக்கொள்கிறேன். என் கெட்ட நடத்தையாலேயே சந்திரன் கெட்டுவிட்டான் என்று எண்ணக்கூடிய விதமாக, நானே, நடந்து கொள்வேன்." என்று தீர்மானித்தேன். சந்திரா! நீ என்னைக் காதலித்தாய், ஆனால் மாசற்றவன் என்று மற்றவர்கள் நினைக்கும்படி, 'மறைவு' வேண்டுமென்று எண்ணினாய். நான் பழியை ஏற்றுக்கொண்டேன். எனக்கு, அது ஒரு பாரமாகத் தோன்றவில்லை. என் வாழ்வு அவ்வளவு ருசியற்றுப் போயிருந்தது. காதலின்பத்துக்காக ஏங்கிக் கிடந்தேன் — கிடைத்த காதலன் கோழையாக இருக்கக்கண்டேன்— எனவே நான் துணிந்து பழியை ஏற்றுக்கொண்டேன்."

இந்தத் தனிமொழியைத் தாரா கூறியபோது, நாடகம் கண்டவர்கள், மகிழவில்லை — ஆமோதிக்கும் துணிவு யாருக்குத்தான் வரும்.

இவளும் ஒரு பெண்தானா! அதிலும் தேவலோகத்தில்! — என்று தான் உலகம்என்னைப்பற்றிக் கூறும் என்று முடித்தாள், தனிமொழியை. இதற்குக் கொட்டகை அதிர்ந்தது, கரகோஷத்தால். நாடகமும் முடிந்தது.

சுயமரியாதைப் பிரசாரமப்பா இது—ஒரு பெரியவர் பேசினார்.

தேவலோக ஆபாசவிளக்கம்— ஒரு பண்டிதர் சொன்னார்.

"இப்படிப்பட்ட இடமா இந்தத் தேவலோகம்!" — ஒரு மூதாட்டி பேசினாள்.

"ஆண்கள், பழிபாவத்தை எப்படியாவது பெண்கள்மீது சுமத்தி விடுகிறார்கள்" — ஒரு கல்லூரி மாணவி கூறினாள்.

ராதாவை, நாங்கள் ஒரு அரை மணி நேரத்துக்குப் பிறகு சந்தித்தோம்.

"எனக்கு எண்ணம் சரியாக உருவாகவில்லை. ஆகவேதான் நாடகம் சற்றுத் தெளிவற்றுப் போயிற்று. என் கருத்து, ஆடவர்கள் தூண்டுபவர்கள்—பெண்கள் அதற்குப் பலியாகி விடுகிறவர்கள் — உண்மைக் குற்றவாளி, ஆடவர் பலிபீடத்தில் சாய்பவர்கள பெண்கள்—ஆடவரின் குற்றங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன, பெண்களின் தவறு எவரும் கண்டிக்கக்கூடிய நிலையில் மன்றத்துக்கு வந்துவிடுகிறது, என்பதை விளக்குவதுதான்—என்றாள்.

ராதா, நாடகத்தின் மூலமும், அதன் விளக்கமாகக் கூறிய மொழியின் மூலமும், தன் தாயார் போன்றவர்கள், பழிக்கப்படுகிறார்களே யொழிய, அவர்களை அந்தக் கதிக்கு ஆளாக்கிய காதகர்கள், மதிப்புடன் உலவுகிறார்கள், என்ற உண்மையை இடித்துரைக்கிறாள் என்றே எனக்குப் பட்டது.

விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினோம். சுருக்கமாக, ஆனால் உறுதியுடன், நான் என் தீர்மானத்தை, என் நண்பனிடம் கூறினேன்—"நண்பா! நான் ராதாவைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறேன்" என்று.

பிறகு, நான், ராதாவை அடிக்கடி சந்திக்கவும், அவள் மனதை அறியவும், முயற்சிகளைத் துவக்கினேன். தோல்வி இல்லை. வெற்றிப்பாதையிலேதான் செலகிறேன். ராதா, என்னை உள்ளன்போடுதான் நேசிக்கிறாள். ஆனால் நண்பர்கள் சிலர், இரகசியமாகப் பேசிக்கொள்வதும், என் செவி புகாமலில்லை, "பாம்புடன் விளையாடுகிறான்" — என்று பேசுகிறார்கள்!

*　　*　　*

ரங்கோன் ராதா, முடிந்தது. நிஜமாகத்தான்! அட, பாவி! ஆசை காட்டி மோசம் செய்கிறாயே. கதையைத் திடீரென்று முடித்து விடுகிறாயே.

கலியாணம் நடக்கிறதா இல்லையா?

ராதாவின் தாயார் என்ன கதி? கொடுமை படுத்திய மாஜி கணவன் என்ன கதி?

விபசாரம் செய்த தாயாரை நெடு நாட்களுக்குப் பிறகு கண்டுபிடித்த மகன், பிறகு என்ன செய்தான்? ராதாவைக் கலியாணம் செய்துகொள்வதற்கு, அந்த நண்பனின் பெற்றோர் இசைந்தார்களா?

இவை எதனையும் கூறாமலேயே, கதை முடிந்தது என்கிறாயே, என்னப்பா இது?—என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு.

இத்தனை விஷயங்களும், முற்றுப் பெறாமல் தான் உள்ளன.

கலியாணம் நடைபெறத் தான் இல்லை.

காதலர்கள், பேசிக்கொண்டு உல்லாசமாக இருக்கும் நிலையிலேதான் கதை முடிகிறது. ஏனெனில், சிலபல கற்பனைப் பெயர்களுடன் தீட்டப்பட்ட இந்தக் கதை, சமுதாயத்தில் உள்ள ஒரு விசித்திர நிலைமையை விளக்கும் முயற்சிதானே யொழிய, ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான்—என்பது போன்ற கதை அல்ல — சகல அம்சங்களையும் பூர்த்தியாக்கி, சம்பூர்ண ராமாயணம் ஆக்க!

ஒரு சம்பவம்!—ஒரு பழம் கதை! ஒரு புதிய உறவு! இவைதான், கதையின் அங்கங்கள்.

இரு நண்பர்கள் ஒரு அழகிய பெண்ணைக் கண்டனர் — சம்பவம்.

அந்தப் பெண்ணின் தாயார் மூலம், ஒரு நண்பன், தன் குடும்பத்தின் பழைய வரலாறு தெரிந்து கொள்கிறான் — பழம் கதை.

அதன் விளைவாக ராதாவை நண்பன் காண்கிறான் — நேசம் ஏற்படுகிறது. — புதிய உறவு.

இவ்வளவுதான்! இனிக் கதையைத் தொடரவேண்டிய அவசியம் நமக்கு இல்லை.

அதோ, செல்கிறார்கள், களிப்புடன், மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது பற்றிக் கவலையு மற்று—ராதாவும் அவள் காதலனும்.

அந்த உல்லாசப் பயணம் அவர்களின் இன்பம்.

அது வெற்றிகரமாக முடியட்டும். இது நமது அன்புரை. அவ்வளவு தான், நமது பொறுப்பும் கூட.

*

# பார்புகழ் தமிழர்

வெட்டுவார், வீழ்வார் இங்கு
　வியர்வையைப் பொழிவார் நித்தம்
கட்டுவார் கூடம் மாடம்
　காவலும் புரிந்தே நிற்பார்;
ஏர் கொண்டு உழுவார் அவரே
　ஏற்றத் தொழிலாளியும் அவரே
எலும்புகள் முறியும் எதிலும்;
　அரும்பிலே கருகும் வாழ்வு
மூட்டைகள் சுமப்பார் வாழ
　முதுகெலும்பதுவும் முறியும்;
ஏற்பது அன்றி வேறோர்
　வழி இலாதாரும் உண்டு;
வெளுப்பவர் அவர்தாம், மேனி
　கருத்திடும் அத் தொழிலாலே;
விதைப்பவர் அவரே; விளைய அறுப்பவர்
　　　　　　　　அவர்தாம்
　ஆனால் குவிப்பவர் வேறோர் சாரார்
யாரென அறிவீர்! இவரே
　பார் புகழ் தமிழர்! ஆமாம்!!
பற்பல பாடும் பட்டு, பசியுடன் வாடுகின்றார்
　வாழ்கின்றார் தமிழர் என்று.
வாயுரை செய்வர், கண்டீர்
　வதைகின்ற தமிழர் காட்சி,
வழியுண்டோ சொல்வீர், மீட்சி.
　ஐயனை வேண்டி நின்றார், அம்மையை
　　　　　　　　மறக்கவில்லை;
செப்பிய பூஜை யாவும் செய்தனர்,
　　　　　　　　தவறே இல்லை;
　கப்பிய வறுமை நீக்கும் வழியதோ
　　　　　　　　தெரியவில்லை;
இப்புவி வாழ்வும் ஏனோ, ஈசனே, என்றோ
　　　　　　　　சாவு?
　என்றுமே அழுது நிற்கும், ஏழைகள்
　　　　　　　　இவர்களெல்லாம்,
எந்தமிழ் நாட்டார்—அந்தோ!—ஏன் முயல்
　　　　　　　　ஆமையானார்?

Edited Prined Publised by C. N. Annadurai M. A. at "Dravi da Nadu" Press,
95. Tirukkachinambi Street. Conjeeveram.